
# சிரித்திரன்

பெப்ரவரி – மார்ச்






ஒரு பிச்சைக்காரன் : என்னப்பா..., இன்றைக்கு ரியூட்டரி வாசலிலை நின்று பிச்சை எடுக்கப்போறாயா?

மறு பிச்சைக்காரன் : இல்லை... மூன்று மாசத்தில் என்னுடைய கடைசிப் பெடியன் என்னை லண்டனுக்குக் கூப்பிடப் போறானாம்.... அங்கால போய் பிச்சை எடுக்க இங்கிலிஷ் தெரியவேண்டுமே..... அதுதான் 60 நாளிலை ஆங்கிலம் படிக்க... என்ன செலவாகும் எனக்கேட்க வந்துள்ளேன்.....

செய்தொழில் தெய்வம்
சிரிப்பே சீவியம்

தமிழர் தாயகத்தின் முன்னோடி நகைச்சுவை ஏடு 25/=


## எரிச்சல் ஏகாம்பரம்....





## அரசியல் கோமாளிகள்....





## காலமும் கோலமும்.... 1



## குடிமக்கள் மகாத்மீயம்....




## காலமும் கோலமும்.... 2



# சிரித்திரன்

நகை : 42

சுவை : 03

'செய் தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்'


பெப்ரவரி - மார்ச் 2005




## அம்மாவுடன் சில வார்த்தைகள்.....



சான்றோர் அவையில்
முந்தியிருக்க வைத்த
தந்தையின் இழப்பையே
ஜீரணிக்க முடியாத நிலையில்
ஈன்ற பொழுதில் பெரிதுவந்த
தன்மகன் சான்றோன் எனக்கேட்டு
பூரித்த தாயையும்
இழந்த துயர் நெஞ்சடைக்க
திகைத்து நிற்கிறேன்.
தந்தை தொட்ட பணித்தடம்
தொடர்ந்து
'செய்தொழில் தெய்வம்
சிரிப்பே சீவியம்'
–என
மக்களைச் சிந்திக்கவும்
சிரிக்கவும் வைக்க
அம்மா உங்களின்
ஆசியை வேண்டி நிற்கிறேன்.
கண்ணீருக்கிடையேயும்
புன்னகைக்கக் கற்றுக் கொடுத்த
தாயே உங்களுக்காக
அஞ்சலிக்க முடியவில்லை.
உங்களை – வணங்கத்தான் முடிகிறது.




வாசக நேயர்களுக்கு
வணக்கம்!


போரால் ஏற்பட்ட பேரழிவுகளாலும், சுனாமி இயற்கை அனர்த்தம் காரணமாகவும் எமது மண்ணும், மக்களும் சொல்லொணாத் துயர் அடைந்துள்ள சூழலில் உலகெங்குமிருந்து நீளும் துயர் துடைக்கும் கரங்களின் ஆதரவுப் பலம் மட்டுமே, மனிதம் இன்னமும் உயிர்த்திருப்பதான நம்பிக்கையை வலுப்படுத்துகிறது.


எனினும் என்ன, – இலங்கையில் ஜனநாயகத்தை பீடித்துள்ள பேரினவாதப் புற்று நோயானது, மனிதாபிமானத்தை மரணத்தின் எல்லைக்குக் கொண்டு சென்றுள்ள அவலமான நிலையில், மனிதத்தின் எதிர்காலம் இங்கு கேள்விக் குறியாகிப் போய்விட்டது என்றே கூறவேண்டும்.


பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளுக்கு வரிபோட்டு ஆதாயம் தேட முயலும் அசிங்கமும், நிவாரண உதவிப் பணிகளை அரசியல் லாபநோக்குடன் திட்டமிடும் அயோக்கியத்தனமும் இந்த நாட்டில் தான் அரங்கேறியுள்ளன....


அறம் கோனில்
அரசு கோனும்...
அரசு கோனில்
ஆட்சி கோனும்....
ஆட்சி கோனில்...நாடு எந்த அழிவினின்றும் மீட்சி காணப் போவது கிடையாது. இதனை உணரும் அறிவு அதிகார பீடத்தை அலங்கரிப்போர்க்கு இல்லாது இருப்பதே – வளம் மிகுந்த இந்த நாடு வலது குறைந்த நாடாக இருப்பதற்குக் காரணமாகும்.

சிந்திப்பீர்....
செயற்படுவீர்...!








# சுந்தர நகை

## காலத்தை வென்று நிற்கும் சுந்தரின் கருத்தோவியங்கள்






## சிந்திக்க ஒரு நொடி


'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு' என்றார் யேசுபிரான்.


ஆனால் மூன்று முறை முகத்தில் அடித்தால் புத்தருக்கும் கோபம் வரும் என்கிறது ஜப்பானியப் பழமொழி ஒன்று...

### சினித்தாத்தா












சவாரித்தம்பர்
மெயில்வாகனத்தார் தளிக்கப் போறியளோ?
இல்லே.. கொழும்புக்குப் போறன்...வழியில் எல்லாம் திறந்து பாக்கிறாங்களாம்.. அதுதான் இப்படி..


சகோதர பாசம் தெய்வம் தந்த உறவு... மேடையில் நீ பேசியது அத்தனையும் பொன்
Thank you Thank you
இதென்ன மேசையில் பாதிக் கத்தரிக்கோல்?
எங்க வீடு பாகப் பிரிவினை செய்தபோது கத்தரிக்கோலையும் பிரித்து எடுத்துக் கொண்டோம்


தங்கச்சி.. அப்பா, அண்ணா எல்லோரும் அந்நிய நாட்டில்.. இம்முறை நீதான் பொங்க வேணும்
டியூட்டரியில் பொங்கிறது சொல்லித் தரவில்லை


இங்கே முட்டை விற்கப்படும்


பெருபேறும் மகப் பேறும்
எங்க அண்ணு மரதன் ஓட்டத்தில் முதலிடம்!
①
உயரப்பாய்தலில் புதிய சாதனையை நிலை நாட்டியவர்!
②
கிரிக்கட் "பாட்" தூக்கினுல் செஞ்சரி தான்!
③
உதைப்பந்தாட்டத்தில் அடிப்பதெல்லாம் கோல்தான்!
④
ஆனல் அம்மாவுக்கு ஆஸ்பத்திரியில் மருந்து வாங்கி வா என்றல் "ஐயோ அம்மா கால் நோகுது" என்கிறர்
⑤



# வெறுங்கடதாசி

பிரதாபனும் கண்ணனும் வேலையின் நிமித்தமாக வெளியூரில் தங்கியிருந்தனர். உணவுக்காக அவர்கள் கடையையே நம்பியிருந்தனர். மாதத்தில் ஒருமுறை, ஓரிரு நாட்கள் வீட்டு உணவைச் சுவைக்கக் கூடியதாக இருக்கும்.

-மாவன்னா-

ஒரு நாள் காலை கடையிலிருந்து உணவை வாங்கி வந்து இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். பிரதாபன் முதலில் சாப் பிட்டு முடித்துக் கைகளைக் கழுவிவிட்டு வந்து கண்ணனுக்கு அருகில் அமர்ந்தான்.

கண்ணனுக்கு அன்றைய காலைச் சாப் பாடு மிகவும் ருசியாக இருந்ததால், ஒன்றும் விடாமல் முழுவதையும் வழித்து உண்டு கொண்டிருந்தான். "பேப்பர் கவனம் மச்சான்" என்று பிரதாபன் சொன்னதையும் கண்ணன் லட்சியம் செய்யவில்லை. சாப் பிட்ட கடதாசியை உருட்டி மடித்து வெளியில் கொண்டு சென்று எறிந்தான். வெளியில் அதையே எதிர்பார்த்திருந்த இரண்டு நாய் கள் ஒன்றையொன்று கடித்துச் சண்டை யிட்டன. எச்சில் கடதாசி யாருக்கு என்ற ரீதியில் மிகுந்த போராட்டம் நடந்து கொண் டிருந்தது.

பிரதாபன் அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான். கற்பனை சிறகடித்தது. கைகளைக் கழுவிய கண்ணன், "என்ன மச்சான் இருந்தாப் போலை சிரிக்கிறாய்" என்று நண்பனை விசாரித்தான்.


"ஒண்டுமில்லை மச்சான். நீ வழிச்சுத் துடைச்சு எறிஞ்ச வெறுங்கடதாசிக்கு உவை இரண்டு பேரும் உப்பிடி அடிபடுகிறதைப் பார்க்க சிங்கள அரசின்ரை தீர்வுப் பொதி ஞாபகம் வந்திட்டுது அவ்வளவு தான்" என்றான்.

# என்னைச் சாப்பிடவாம்

சடையர் எதிலும் பகிடி விடுபவர். அவரோடு கதைப்பதற்கென்றே கூட்டம் கூடும். அன்று சின்னண்ணர் அவரோடு கடைத் திண்ணையில் கூட்டுச் சேர்கிறார். இலங்கையில் நடக்கும் கொலைகளைப் பற்றி இருவரும் சிலாகித்துக் கதைத்துக் கொள்கின்றனர்.

வீதியால் வந்த அவரது மருமகள் முறையான சிறுமி அவரைப் பார்த்து "மாமா! உங்களைச் சாப்பிடக் காத்துக் கொண்டிருக்கினம். கெதியிலை வரட்டாம்" என்று கூறிவிட்டுச் செல்கிறாள்.

சடையர் பயத்தோடு, சிரிப்பதுபோலப்




பெரியதொரு சிரிப்பையுதிர்த்து "பிள்ளை! சொன்னதுக்கு நன்றி. நான் இண்டைக்கு வீட்டை போறதில்லை" என்று சொல்ல சின் னண்ணர் வியப்புடன் "ஏன்?" என்று வினா வினார்.

இலங்கையிலை நடக்கிற கொலைச் செயல்களை விட இது கொடுமையாயிருக்கு. என்னைச் சாப்பிடக் காத்துக் கொண்டிருக்கினமாம். நானெப்படிப் போறது?" சின்னண்ணை சிரிக்கிறதுக்கு உதவியில்லாமல் போனது தவிப்பாயிருந்தது.



கணவன் :
ஏண்டி
எங்கம்மாவை பிசாசு
என்று திட்டினாய்?
மனைவி :
நான் ஏன் அந்தச்
சனியனைத்
திட்டப்போறன்.



# பாசமா? சாகசமா?

—மாவன்னா—

பிரபல்யம் வாய்ந்த விளையாட்டுத்திடல் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும், எந்த வீதி களைப் பார்த்தாலும் சிறியவர், பெரியவர், இளைஞர், யுவதிகள், ஆண்கள், பெண்களௌன கொடிவிட்டுச் சரிந்தது போல இருந்தது. என்ன விசேஷம் அப்படி...?

சீனநாட்டுச் சாகசக்காரரின் விநோத விளையாட்டுக்கள், உடற்பயிற்சிகள், சாகசங்கள் எனப்பல நிகழ்வுகள் நடை பெற்றுக் கொண்டிருந்தன, அந்த விளையாட்டு மைதானத் தில்.

அழகான வர்ணத்தில் விசேட உடையோடு இருபத் தைந்து வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன், உயரத் தில் ஒரு பலகையில் அழகு ரூபனாக நிற்கிறான். எல்லோ ரும் அவனையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நிற்கின்றனர்.

அவன் சொல்கிறான், ‘அன்பர்களே! எல்லோருக்கும் வணக்கம். நான் இப்போது இங்கே கட்டப்பட்டிருக்கின்ற ஐம்பது மீற்றர் நீளமான இந்தக் கயிற்றின் மீது எந்தவித உதவியுமில்லாமல் நடக்கப்போகிறேன். உங்களால் நம்ப முடியுமா?’

எல்லோரும் மௌனமாக நிற்கின்றனர்.

‘‘என்னால் நடக்க முடியும் என்ற நம்பிக்கை எனக் குண்டு. அதனால் கயிற்றின் மீது நடக்கப்போகிறேன்’’ என்றவாறு அந்தரத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றின்மீது மிக வும் சாவதானமாக நடந்து சென்றான். மக்கள் கர கோஷம் வானைப்பிளந்தது. சீழ்க்கை ஒலி காதுகளை அடைத்தது.

கயிற்றின் மறுபலகையில் நின்றிருந்த அந்த இளை ஞன் சிறிது நேர இடைவெளியின் பின், ‘‘இப்பொழுது இந்தக் கயிற்றின் மீது ஒரு துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் செல்லப்போகிறேன். நீங்கள் நம்புவீர்களா?’’ என்று கேட் டான்.

எல்லோரும் அமைதியாக இருந்தனர். ஆனால், எல்லோர் முகங்களிலும் அதிர்ச்சியுடன் கூடிய ஆவல் தெரிந்தது. இளை ஞன் மேலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி யொன்றைக் கயிற்றின் மீது நிறுத்தி வைத்தான். கயிற்றின் மீது நிறுத்துவ தற்காக துவிச்சக்கரத்தின் ரயர்கள் கழற்றப் பட்டிருந்தன. ஆபத்து என்பது எப்படியானது என்பதைக் சற்றும் சிந்தியாத ஒருவனைப் போல, சைக்கிள் சவாரி, கயிற்றின் மீது விரைந்தது. பார்ப்பவரின் தலை சுற்றியது என்று சொல்லவா வேண்டும்?

மறுபுறப் பலகையில் இப்பொழுது இளைஞன் நிற்கி றான். மறுபடியும் கரகோஷமும், சீழ்க்கை ஒலியும் மைதா னத்தை ஆரவாரம் மிக்கதாக்குகிறது. நடை பாதையில் நடக் கின்றபோதே விழுந்து விடுவோமோ என்று பயந்து சாகும் நாம், ஐம்பது அடி உயரத்தில், அதுவும் ஒருபட்டுக் கயிற்றில் நடப்பதும், சைக்கிள் சவாரி செய்வதென்பதும் நினைத்துப் பார்க்கக் கூடிய செயலா?

இப்பொழுது ஆரவாரம் அடங்கச் சிறிது நேரம் பிடிக் கிறது. எல்லோருக்கும் இளைஞன் மீது அபார நம்பிக்கை. நடந்தது மட்டுமல்லாமல் சைக்கிள் சவாரி செய்து காட்டு கிறானே? இதைவிட அவனுடைய சாகசங்களில் அவநம்பிக் கைப்பட என்ன இருக்கிறது? இவன் உண்மையிலே ஒரு சாகச வீரன்தானென எல்லோரும் பேசிக்கொள்கின்றனர். அடுத்ததாக என்ன நிகழப் போகிறது என எல்லோரும் ஆவலோடு இருக்கின்றனர். இளைஞன் பலகையில் மீண்டும் தோற்றமளித்தான்.

‘‘அன்பானவர்களே! கயிற்றின் மீது நடக்கப்போகிறேன். உங்களால் நம்ப முடிகிறதா? என்று ஆரம் பத்தில் கேட்டேன். நீங்கள் எதுவித பதிலும் தரவில்லை. அமைதியாக மட்டுமே இருந்தீர்கள். நீங்கள் சந்தேகமடைந்தாலும் அது சந்தேக மானதாக இருக்கக்கூடாது என்பதற்காக கயிற்றின் மீது இல குவாக நடந்து காட்டினேன். நீங்கள் எவ்வளவு ஆச்சரியத் தோடு ரசித்தீர்கள் என்பதை உங்கள் ஆரவாரங்கள் எனக் குத் தெரியப்படுத்தின.

இரண்டாவது முறையும், கயிற்றின் மீது சைக்கிளில் ஓடப்போகிறேன். உங்களால் நம்ப முடிகிறதா? எனக்கேட் டேன். ஆனால், நீங்கள் ஏனோ உங்கள் கருத்தை வெளிப் படையாகத் தெரிவிக்கவில்லை. சிலவேளை, நடப்பது சுலப மானதாக இருக்கலாம். சைக்கிளில் ஓட முடியுமா? என்ற சந் தேகம் இருந்திருக்கலாம். ஆனால், அதையும் மிகவும் திறமையான முறையில் செய்து காட்டியிருக்கிறேன். இனிமேல் நான் செய்யப்போவதில் நீங்கள் நம்பிக்கை கொள்கிறீர்களா? இல்லையா?’’ என்று நிதானமாகக் கேட்டான் இளைஞன்.



இப்போது எல்லோரும் இளைஞனுக்கு உற்சாகமளிப் பதற்காகவோ அல்லது தங்களுக்கிருக்கும் சிறிய சந்தேகத் தையும் வெளிப்படுத்தக் கூடாது என்பதற்காகவோ என்

னவோ மிகவும் ஆவேசத்துடன், ''நாங்கள் சந்தேகம் கொள்ளவில்லை. நீங்கள் எதையும் செய்வீர்கள். நாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம். சந்தேகமில்லை'' என்று ஏகோபித்த குரலில் சத்தமிட்டனர்.

இளைஞன் தன் எதிர்பார்ப்பு நிறைவேறும் என்ற நிறைவோடு, ''எல்லோருக்கும் நன்றி. அன்பானவர்களே! இதுவரை நான் செய்து காட்டிய சாகசங்களை நீங்கள் ரசித்தீர்கள். சுவைத்தீர்கள். இப்போது ஒருபடி கூடுதலாக, ஒரு கையில் குழந்தையொன்றைத் தாங்கியவாறு இந்தக் கயிற்றின் மீது துவிச்சக்கர வண்டியில் ஓடப்போகிறேன். ஆகவே, உங்களில் யாராவது ஒரு குழந்தையைத் தருவீர்களா?''

மைதானத்தில் மயான அமைதி, செக்கன்கள் நிமிடங்களாகின. அமைதி உடைக்கப்படவே இல்லை. கையில் குழந்தைகளோடு நின்ற சிலர் வெளியேற முயற்சித்துக் கொண்டிருந்தனர். இளைஞனின் பார்வை மைதானமெங்கும் சுழல்கிறது. கரகோஷமும், சீழ்க்கையும் கரைந்தே போய்விட்டன. ஆச்சரியத்தோடு கூடிய நம்பிக்கைகள், பாசத்தின் முன்னே பலமிழந்து போய்விட்டிருந்தன. இளைஞன் கயிற்றின் ஏணியில் மெல்ல இறங்கிக் கொண்டிருந்தான். ❏

## கொடியது கேட்கின்....
## கொடிது கொடிது...

இன்று சுனாமி கடல் அனர்த்தத்தினால் இலங்கையில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் பெறப்பட்டுள்ளது. மதிப்பீடு செய்ய முடியாத அளவுக்கு கட்டடங்கள், வீடுகள், பாடசாலைகள், கோயில்களெனத் தரைமட்டமாகியுள்ளன. இது இன்று அகில உலகமுமே இரக்கம் காட்ட வேண்டிய, காட்டுகின்ற செயலாகத் தோற்றம் பெற்றுள்ளது என்றால் மறுப்பதற்கில்லை. உலக நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு உதவிக்கு மல்லுக் கட்டுகின்றன.

"தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்பது போல இலங்கை அரசியல் ஆகிவிட்டுள்ளது. ஒவ்வொருவரும் தாம் நினைப்பதே சரி எனவும். தாம் சொல்வதே சரி எனவும் தம்பட்டம் அடித்துக்கொள்ளுகின்றனர்.

எல்லாவற்றையும் இழந்த நிலை என்பது சுனாமியினால் மட்டும் ஏற்பட்டுப்போன ஒன்றல்ல. இலங்கை ஆமியினாலும் ஏற்பட்டுப்போனது. சுனாமியைவிடக் கோரமானது. கேவலமானது ஆமியினால் ஏற்பட்ட அழிவென்றால் யார் மறுப்பார். சுனாமி, யாரையும் வெட்டிக் கொலைசெய்யவில்லை. கணவன் பார்த்திருக்க மனைவியையும், தந்தை பார்த்திருக்க மகளையும் நிர்வாணமாக்கி மானபங்கப்படுத்தவில்லை.

ஓடிப்போ என்று சொல்லி ஒருவர் பின் ஒருவராக ஓடவிட்டு, அவர்களின் பின்னே துப்பாக்கிக் குண்டுகளைத் துரத்தி விடவில்லை இந்தச் சுனாமி.

கயமைத்தனங்களைப் புரிந்துவிட்டு கன்னிப் பெண்களின் உடல்களை மலக்குழிகளினுள்ளும், அகலக் கிடங்குகளிலும் மூடிமறைக்கவில்லை இந்தச் சுனாமி.

அதன் இயற்கையின் விளையாட்டில் அகப்பட்டுப்போனவர்கள் தானே அலைக்கழிந்து போனார்கள். அதற்குத் தெரியுமா அப்பன் யார்? அம்மா யார்? பிள்ளைகள் யாரென்பது? பால் குடிக்கும் குழந்தையைப் பறிதெறிக்கக் கூடாது என்று அலைக்கெப்படித் தெரியும்?

பள்ளிப்பிள்ளைகள், பச்சைப் பாலன்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது, தூரக் குண்டெறிந்து கோரக் கொலை புரிந்த சிறிலங்காவின் கொலைகாரர்களை விடவா இந்தச் சுனாமி கொடியது. இல்லவே இல்லை.

ஆமியால் அழிந்து போனதற்கு ஆதரவு தராத உலகம், இன்று சுனாமி அலைப்பேரழிவை மட்டும் இரக்கத்திற்கு உரியதென உரத்துச் சொல்கிறதே! இது கூடக் கொடியதல்லாமல் வேறென்ன?

## அழகான எதிரி



காகங்கள் மீனை இரையாக
தேடிப்பறந்த கரைகளில்
இறந்தவர்கள்
குவிந்து கிடந்தனர்.

மனை, சொத்து
தூசு, துகள்கள், துரும்பு என...
மிச்ச சொச்சம் விடாமல்
எல்லாவற்றையும்
தடவிச் சுருட்டி
இறாஞ்சிக் கொண்டாய்.

எத்தனை முகம்
உனக்கு?


தவழும் மழலை முதல்
நடை தளர்ந்த கிழம் வரை
வெளித் தெரியும்
உனதலைமுகத்தி னழகில்
சொக்கிக் கிடந்தார்...

உனதாழத்தின் அடியில்
இப்படியொரு
கோரமுகம் இருக்குமெனவும்
அந்த முகம்
கரையோர மக்களின்
வாழ்வைத்
துகிலுரியுமெனவும்
யார் எண்ணினர்?

கடலோரக் கிராமங்களின்
வாழ்வின் முழுமையையும்
அரைந்தழித்து
நொருக்கிச் சடலமாக்கி
இழவையும் சொல்லிப்போன
உனக்கு
மிகச் சுருக்கமதாய்
மூன்றெழுத்திலொரு பெயராம்
'சுனாமி'.

கவிதை

-ஆவரங்கால் சுதன்



# மகுடியார் பதில்கள்

*சி.கணபதி.வவுனியா.*

❓ நாட்டில் ஒரு பகுதியை அபிவிருத்தி செய்வதும், மற்றப் பகுதியை அபிவிருத்தி செய்யாமல் விடுவதும் எதைப் போன்றது?

☛ உடலில் ஒரு பாகத்திற்கு இரத்தம் ஓடாமல் தடை செய்வதைப் போன்றதாகும்.

*சி.ராஜநாதன், கொட்டாஞ்சேனை.*

❓ அரசியல்வாதிகளுக்கு மந்திரவித்தை தெரியுமா?

☛ மலையை மடுவாகவும், மடுவை மலையாகவும் படம்பிடித்துக் காட்ட வல்ல மாந்திரீகர்கள்.

*சி.திருநாவுக்கரசு, அச்சுவேலி.*

❓ விஞ்ஞானிகளை நீர் வேண்டுவதென்ன?

☛ முதலில் உணவில்லாதவர்களின் வாயைச் சிந்தியுங்கள். பின்பு செவ்வாயைச் சிந்தியுங்கள்.



*சி.மாணிக்கம், திருகோணமலை.*

❓ உலக நிலைபற்றிச் சொல்லும்?

☛ காடு அழிந்து கொண்டு போகிறது. காட்டுமிராண்டித்தனம் வளர்ந்து கொண்டு போகிறது.

*செல்வி மாலதி தம்பையா, நல்லூர்.*

❓ எமது மக்கள் இன்று எதை நாகரீகமெனக் கருதுகிறார்கள்?

☛ தமிழ்ப் பண்புக்கு எதிரான எல்லாவற்றையும்.

*சி.சிவலோகநாதன், கோப்பாய்.*

❓ உலகில் பொதுவுடமைத் தத்துவத்தை முதன் முதலாக உணர்ந்தவன்?

☛ தமிழன் என நினைக்கிறேன். "யாமார்க்கும் குடியல்லோம்", "யாம் பெற்ற இன்பம்" என யாம், யாம் என்று பாடல்கள் யாத்தவன் தமிழன்.

*சி.நாதன், வேலணை.*

❓ எது ஜனநாயகமாகாது?

☛ வாக்களித்த மக்களுக்கு, அவர்களுக்குப் புரியாத அரசியல் நடத்துவது.

*செல்வி சசிகலா தம்பையா, நல்லூர்.*

❓ ஒரேயொரு கலாச்சாரம் ஒரு நாட்டிற்குப் போதுமென்று கூறுவது சரியா?

☛ பல வர்ணங்கள் கொண்டது தானே வானவில்.

*நா.பரந்தாமன், பரந்தன்.*

❓ தமிழ் இனத்தைப் பற்றி நீங்கள் சிந்திப்பதுண்டா?

☛ மைனா, மணிப்புறா கல்யாணத் தரகர் இல்லாமல் சோடி சேர்கின்றன.... பேச்சே மூச்சாயுள்ள தமிழினத்திற்கு ஒரு தரகர் வேண்டியிருக்கிறதே சோடி சேர்வதற்கு என்று சிந்திப்பதுண்டு.

*செல்வி மனோன்மணி, கனகசபை.*

❓ தரமில்லாக் கலைப் படைப்புகள் மறையவும், தரமுள்ளன நின்று நிலைக்கவும் காரணம் என்ன?

☛ காலமென்னும் முறம் பதரைக்கொழித்து ஒழிக்கும். முத்தை ஒளி வீசச் செய்யும்.

*ம.மரியாம்பிள்ளை, நெல்லியடி.*

❓ வாகனங்களின் வேகம் கட்டுப்படுத்தப்படாவிடில்?

☛ இடுகாடு கனக்கும்.

*த.வடிவேல், வேலணை.*

❓ அம்புக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

☛ அம்பு குறிதவறினாலும் அன்பு குறி தவறாது.

*சி.பரமேஸ்வரன், கொக்குவில்.*

❓ ஆதாம் மனைவிக்கும் உமது மனைவிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

☛ ஆதாம் மனைவி ஏவாள். எனது மனைவி ஏவுவாள்.

*செல்வி மணிமேகலை நாகநாதன், எட்டியாந்தோட்டை.*

❓ எவன் சிறந்த பத்திரிகையாளன்?


☛ தகவலுக்கு ஆவலாயிருக்கும் மக்களுக்கு, அவல்ச் செய்தி கொடுப்பவன்.



*பரந்தாமன், கீரிமலை.*

❓ சமாதானம் விரும்பும், சிறிய நாடுகள் அணுக்குண்டு குவிக்கும் வல்லரசின் நட்பை நாடலாமா?

☛ புறாக்குஞ்சு கருநாகத்தின் அரவணைப்பில் குளிர்காய எண்ணலாமா?



*விபுல் சிறி - மட்டக்களப்பு*

❓ டாக்டருக்கும் கண் டாக்டருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

☛ டாக்டரின் தவறு குழியில் மறைக்கப்படும்.
கண் டாக்டரின் தவறு கூலிங்கிளாசால் மறைக்கப்படும்.

*க.பரமேஸ்வரன் - வவுனியா.*

❓ அன்றைய தமிழன் இமயத்தில் கொடி நாட்டினான். நீர் என்ன செய்தீர்?

☛ மனைவிக்குக் கொடி கட்டினேன்.

*செல்வி உஷாந்தி நாகராசா - நல்லூர்.*

❓ அன்றைய அரிச்சந்திரனுக்கும் இன்றைய தமிழனுக்கும் உள்ள வேறுபாடென்ன?

☛ அன்று அரிச்சந்திரன் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்கு மனைவி, மகனை விற்றான் – இன்று தமிழன் தன்னைக் காப்பாற்ற டொனேஷன் வாங்கி விற்கிறான்.

*L.F. விக்டர் - கொழும்பு.*

❓ ஒரு இனம் எப்போது அழியும்?

☛ என்று ஒரு இனம் அந்நிய மொழியைத்தன் சிந்தனை மொழியாக்குகின்றதோ அன்றே அந்த இனம் அழிந்து விடும்.

*சு. ஏபிரகாம் - இளவாலை.*

❓ உமது தாயார் உமக்குப் போதித்ததென்ன?

☛ அயலுக்கும் அளந்து அடியாளுக்கும் அள.

*P - சுகுணவதி - பதுளை.*

❓ எவன் எல்லாம் இழந்தவன் எவன் எல்லாம் உள்ளவன்?

☛ கை இருந்தும் நம்பிக்கை இல்லாதவன் எல்லாம் இழந்தவன். கை இழந்தும் நம்பிக்கை உள்ளவன் எல்லாம் உள்ளவன்.

*மொகமட் ஜலால்டீன் - யாழ்ப்பாணம்.*

❓ அறிவு வளர்ச்சியால் மனிதன் மனச்சாந்தி அடைந்துள்ளானா?

☛ பட்டைதாரியாக இருந்த வேடுவனுக்கிருந்த மனச்சாந்தி, இன்று பட்டதாரிகளுக்கு இல்லையே!

*A.லக்மிதேவி - கிளிநொச்சி.*

❓ இன்றைய பிள்ளைகளுக்குப் பெற்றோர் மேலுள்ள பாசம் எப்படிப்பட்டது?

☛ பெற்றோரின் கவலையைப் பங்கு போட வரமாட்டார்கள். காணியைப் பங்குபோட வரிந்து கட்டிக்கொண்டு வருவார்கள்.

*S.சிவராசா - மஸ்கெலியா.*

❓ வெள்ளைக்காரனுக்கும், தமிழனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

☛ ஒலிபெருக்கியைக் கண்டு பிடித்தவன் வெள்ளைக்காரன். அதன் மூலம் ஒலி பெருக்கித் தொலைப்பவன் தமிழன்.

*ஜீவப்பிரகாஷ் - பம்பலப்பிட்டி.*

❓ தமிழன் கவலை என்ன?

☛ என் வேலி .... என் தாலி.... அதுவே இவன் சோலி.

*K.மக்பூல் - யாழ்ப்பாணம்.*

❓ ரோமாபுரி எரியும் போது நீரோ மன்னன் பிடில்வாசித்துக் கொண்டிருந்தான். யாழ்ப்பாண நூலகம் எரியும் போது யாழ்ப்பாண மக்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்.

☛ சுவாசித்துக்கொண்டிருந்தனர்.

*வி.சுகுமார் - சாவகச்சேரி.*

❓ இன்று தந்தை மகற்காற்றும் உதவி என்ன?

☛ சீட்டுப்பிடித்து கடவுச்சீட்டு எடுத்து மகனை அந்நிய நாட்டுக்கு அனுப்புதல்.

*பைரவி - கைதடி.*

❓ தமிழினத்துக்கு என்ன வேண்டும்?

☛ இறந்தகாலம் உண்டு. எதிர்காலமும் வேண்டும்.

*சி.சிங்கணேஸ்வரன் - யாழ்ப்பாணம்.*

❓ அந்நிய நாட்டிலிருந்து வரும் பணத்துக்கு என்ன ஆகின்றது?

☛ ஒரு பகுதி மதுவில் மறைகின்றது. ஒரு பகுதி சீதனத்தில் சிதைகின்றது. ஒரு பகுதி வங்கியில் நிறைந்திருக்கின்றது.

*த.கனகசுந்தரம் - சாவகச்சேரி.*

❓ வாலிபர்களுக்கு நீர் கூறும் அறிவுரை என்ன?

☛ மன்மத பாணமும், மாது பாணமும் ஆபத்தானவை.



*சி.ராமையா, மாத்தளை.*

❓ டாக்டர்களுக்கு மகுடியார் கூற விரும்புவது என்ன?

☛ நோயாளியின் உயிர் குற்றுயிராக இருக்கும் போது தொலைபேசியில் உறவினரின் குசலம் விசாரிக்கக் கூடாது.


மகுடி பதில்கள் பகுதிக்கு கேள்விகளை அனுப்புவோர்
கடித அட்டையில் கீழ்க்காணும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவும்.
சின்ன மகுடியார் பதில் தருவார்.

கேள்வி:..........................................................................
..........................................................................
..........................................................................

அனுப்புபவர் பெயர்:
..............................

முகவரி:..........................
..............................

சின்ன மகுடியார் பதில்கள் ,
தபால் பெட்டி எண் : 149,
யாழ்ப்பாணம்




உலக மகளிர் தினத்தைக் கொண்டாடுமுகமாக சந்திரபுரம் மாதர் மன்றம் எடுத்த முழுநாள் பெருவிழாவில் பெருந்திரளான பெண்களும், ஆண்களும் (மண்டபத்துக்கு வெளியே) கூடியிருந்தனர்.

மண்டபம், உள்ளும் புறமும் மாலை, தோரணம், மணவறை, சிகரம் என்பனவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாசலில் கோலம், நிறைகுடம், மலர், மஞ்சள், குங்குமம் ஆகியவற்றால் மணம் கமழ்ந்தது.

பார்வையாளர்களின் வருகைக்காக வ.பி.போ.சபை சிறப்பு பேருந்துகளை ஓடவிட்டிருந்தது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை உள்ளூர் காவல்துறையினர் கவனித்தனர்.

மன்றத் தலைவி செல்வி பொன்மொழி அன்புதாசர் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

காலை நிகழ்ச்சிகள் மங்கள இசையுடன் ஆரம்பமாகின. செல்விகள் தேன்மொழி, மலர்விழி இருவரும் தமிழ் வணக்கம் பாடினர்.

தலைமையுரையை அடுத்து தேசியப் பேரவை உறுப்பினர் பிரேமானந்தபிள்ளை வாழ்த்துரை வழங்கினார். தபாலில் வந்த வாழ்த்துரைகளும் வாசிக்கப்பட்டன.

மாதர் மன்றத்தின் முன்னாள் தலைவி மங்கையர் திலகம் சிறப்புரை ஆற்றினார்.

அடுத்து, பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அகில இலங்கை மகளிர் ஒன்றியத்தின் தலைவி திருமதி மல்லிகா மேத்தானந்தாவை உரையாற்றும்படி தலைவர் அழைத்தபோது

# இல்லாள் எங்கே?

எழுந்த கைதட்டல் ஐந்து நிமிடங்கள் வரை நீடித்தது. தொடர்ந்து அவர் உரையை அமைதியாகச் செவிமடுத்தனர்.

**—வேரற்கேணியன்**

"பெண்கள் ஆண்டு விழாவிலே பெண்ணுரிமை பற்றியும் பெண்ணின் அருமை, பெருமைபற்றியெல்லாம் பேசுகிறோம். பெண்ணுரிமையை நியாயப்படுத்தி அழகாகப் பாடினார் உங்கள் பாரதியார். ஆனால், உங்களில் எத்தனை பேர் உரிமையுடன் வாழ்கிறீர்கள்? நாங்கள் ஆண்களுக்கு அடங்கி வாழும் நிலை மாறவேண்டும். ஆண்களை அடக்கி வாழ இந்தப் பெண்கள் மாநாட்டிலே சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.."

(கைதட்டல் வானை எட்டியது)

வீட்டிலே, நாங்கள் பின்தூங்கி முன் எழும் பேதையர்களாக வாழ்ந்து வருகின்றோம். ஆண்கள் முன்தூங்கி பின் எழும் பலவான்களாக, ஜொலியாக இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். நாம் பம்பரம்போல் சுழன்று வீட்டு வேலைகளைச் செய்து களைத்துப் போகிறோம். ஆண்களோ கந்தோரிலும் 'கிளப்'பிலும் உல்லாசப் பொழுது போக்குவது யாவருக்கும் தெரிந்த விடயம். அப்படி இருந்துவிட்டு வீட்டுக்கு வந்து எம்மை அடக்கப் பார்க்கிறார்கள். அதுவுமல்லாமல், குடிகாரர் என்றால், அடி உதை பழகவும் எம்மைப் பயன்படுத்து கிறார்கள். அம்மம்மா எத்தனை தொல்லைகள் பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு..."

(கைதட்டல்)

மேசையில் வைக்கப்பட்டிருந்த மாம்பழரசத்தை எடுத்துப் பருகிவிட்டுத் தொடர்ந்தார் மல்லிகா.

"மாமிப் பிரச்சினை... இந்த மாமியார் பிரச்சினையை ஒழிக்க வேண்டும். மாமிமார்களைப் பிடித்து வயோதிபர் மடத்துக்கு அனுப்ப, அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை, நாம் இங்கே நிறைவேற்ற வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் ராக்கிங் என்ற பெயரால் மாணவியரை அவமதிக்கிறார்கள். 'பஸ்'சிலே ஏறினால், "சமத்துவமாக உத்தியோகம் பார்க்கும் பெண் இவள், ஆதலால் நின்றே போகட்டும்" என்று சொல்லி எங்களுக்கு இடம் தர மறுக்கிறார்கள் ஆண்கள். இடம் தருவது சில வாலிபர்கள். சிலவேளை... ஏன் தருகிறார்கள் தெரியுமா? சுரண்ட, அருகில் இருந்தாலும் அவர்கள் மூட்டைப் பூச்சிகளாக மாறிவிடுகிறார்கள்...

சீதனப் பிரச்சினை... இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், சீதனம் கேட்கின்ற இரண்டு பேரை டக் டக்கென்று முடித்து மின்கம்பத்தில் கட்டிவிட வேண்டும்... இந்தப் பழம் பெரும் பிரச்சினைக்கு முடிவு காண வேறு வழி என்ன? தெரிந்தால் சொல்லுங்கள்.


(மண்டபத்தில் வெளியில் மட்டும் கைதட்டல்)

இப்படியாகப் பெண்ணடிமைப் பிரச்சினைகள் பல... இவைக்குத் தீர்வு காணவேண்டும். ஐ.நா. சபை ஆண்டிலே ஒரு நாளைப் பெண்கள் தினமாகப் பிரகடனம் செய்தது ஏன்? சகோதரிகள் சிந்திக்க வேண்டும். ஆகவே, எங்கள் உரிமைகளைப் பெற்று சமத்துவமாக வாழ்வதற்கு வேண்டிய தீர்மானங்கள் இங்கே நிறைவேற்ற வேண்டும் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். வாழ்க பெண்ணினம்.


தொடர்ந்து, அவைத் தலைவி மென்மொழி முடிவுரை ஆற்றினார்.

சகோதரிகளே! இங்கே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அகில இலங்கை மகளிர் ஒன்றியத்தின் தலைவி திருமதி மல்லிகா அவர்களின் உறுதியான

குமார் : ஆபத்துக்கு
உதவாதவன்
நண்பனல்ல...
இந்தா ரகு
நீ அவசரமாகக்
கடனாய்க் கேட்கும்
பணம்.
ரகு : சேவை செய்;
பலனை
எதிர்பாராதே
என்பதையும் மறந்து
விடாதே நண்பா.



வீ.ஏ.விந்தன்




உரிமை முழக்கத்தைத் தமிழில் சரியாக மொழி பெயர்த்தவர் எங்கள் மன்றத்தின் செயலாளர் திருமதி செந்தமிழ்செல்வி மதிவாணன். அவருக்கு என் நன்றி.

இத்தோடு காலை நிகழ்ச்சிகள் நிறைவடைகின்றன. மாலை மூன்று மணிக்கு மீண்டும் கூடுவோம். இப்பொழுது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி மல்லிகா அவர்களுக்கு தரப்படும் விருந்தில் கலந்துகொள்ளும்படி சகோதரிகளை அழைக்கிறேன். அதாவது அழைப்பிதழ் பெற்றவர்கள் மாத்திரம்.

மாலை மூன்று மணிக்கு. செயலாளர் திருமதி செந்தமிழ்ச் செல்வி தலைமையில் தொடங்கவிருந்த மாநாடு நான்கு மணியாகியும் கூடவில்லை.

அவரைத் தேடி அழைத்துவர. இரு பெண்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் போகப் புறப்பட்ட வேளையில் ஒரு பையன். கையில் கடிதம் ஒன்றை வைத்துக்கொண்டு. இதுதானா பெண்கள் கூட்டம் நடக்குமிடம்? என்று கேட்டு நின்றான்.

"ஓ... ஏன்? என்ன வேண்டும்?" என்று கேட்டாள் ஒருத்தி.

"இந்தக் கடிதத்தை கொடுத்திட்டு வரச்சொன்னா. அம்மா" என்றான் அவன்.

மேடையைக் காட்டி "அங்கே கொடு" என்றாள் அவள்.

கடிதத்தைப் பெற்றுப்படித்தாள் பொன்மொழி. அவளைச் சுற்றிப் பெண்கள் திரண்டனர்.

"தலைவர் அவர்களுக்கு!

மாலை மாநாட்டுக்குத் தலைமை தாங்க வர இயலாமைக்காக வருந்துகிறேன். தயவுசெய்து வேறு ஒருத்தியை ஏற்பாடு செய்யவும். அல்லது நீங்களே தொடர்ந்து நடத்துங்கள்.

என்னுடைய கணவர் சமைப்பதற்கு கத்தரிக்காய் வெட்டும் போது விரலை வெட்டிவிட்டார். சாதாரண காயமல்ல. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு. அப்படி ஆயிற்று நிலைமை. அவர் மருந்து கட்டப்போனார். 'அட்மிற்' பண்ணிவிட்டார்கள். வீட்டிலே சமையல் முடியவில்லை. காலையிலிருந்து வீடு ஒரே அல்லோல கல்லோலம். அயலவரும் கூடிவிட்டனர். குழந்தைகள் பசியால் துடிக்கிறார்கள். சமையலை முடித்துக்கொண்டு மருத்துவமனைக் குப் போகவேண்டும். 'லீவு' எடுத்துக்கொண்டு சமையலையும் பிள்ளைகளையும் கவனிப்பதாகச் சொன்னவர் 'வார்ட்'ல் கிடக்கிறார். நான் எப்படி மாநாட்டுக்கு வரமுடியும்? வேண்டாம் எனக்கு மன்றமும் மாநாடும். எனது விலகல் கடி தத்தை அனுப்பி வைக்கிறேன். மாநாடு குழப்பமின்றி நிறைவேற வாழ்த்துக்கள்!

இப்படிக்கு ,
செந்தமிழ்ச்செல்வி. மதிவாணன்.

(யாவும் கற்பனையே)

## பேசுவது போலச் செயற்படின் பெருமைநமது காலடியில்

பேச்சு என்பது கலைகளில் ஒன்றாகக் கருதப்பட்டு. அதற்கு மதிப்பும் அளிக்கப்படுகின்றது. மக்கள் எல்லோருமே பேசுகின்றார்கள். தங்கள் மனக்கருத்துக்களை அடுத்தவருக்குத் தெரிவிப்பதற்காகப் பேசுகின்றார்கள். தாங்கள் தெரிந்து கொண்டவற்றை அடுத்தவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பேசுகின்றார்கள். இப்படியாகப் பேச்சு பலவிதமான கருத்துக்களைச் சுமந்து வருகின்றது.

நாமும் எமது கருத்துக்களைக் குவித்துப் பேசிக் கொள்ளலாம். ஆனால். பேச்சு என்பது இலட்சியமுள்ளவர்களால் பேசப்பட. ஆர்வமுள்ளவர்களால் கேட்கப்பட்டாலேயே அது பயனளிப்பதாக இருக்க முடியும். அப்படி இல்லாததினா லேயே. இன்று பேச்சுக்கள் தான் வளர்கிறதே ஒழிய அதன் மூலமான பயன் எட்டாக்கனியாக உள்ளது.


ஒவ்வொரு துறையினரும் தத்தமக்கேற்ற முறையில் பேச முனைகின்றனர். அது நியாயமானதே. ஆனால். அவர்கள் பேசியதால். பேசுவதால் எதனையும் முழுமையாகச் சாதித்துக் கொண்டார்களோவெனில். விடை எதிர்மறையானதாகவே இருக்கும்.

வைத்தியத் துறையினர் சுகாதாரத்தைப் பற்றிப் பேசுவார்கள். சுத்தம் சுகம் தரும் என்பார்கள். ஆனால். வைத்திய நிலையங்களே சுத்தத்தைப் பேண முடியாத நிலையில் இருக்கும். வைத்திய நிலையங்களில் மலசல கூடங்களைப் பார்த்தால். அந்தப் பக்கமே போக முடியாததாக. அருவருப்பாக இருக்கும்.


அரச அலுவலகங்களை எடுத்துக்கொண்டால். அலுவலக நேரம் காலை எட்டு மணியிலிருந்து மாலை நான்கு மணி வரை என்று எழுதப்பட்டிருக்கும். பலமைல் தொலைவிலிருந்து பணி முடிக்க வருபவர்கள் நாயாய் அலைந்து. ஓடாய்த் தேய்ந்து போவார்கள். சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு பிடிக்கவே முடியாது. "சந்தேகங்களை நேரில் பேசித் தீர்க்கலாம்" என்பார்கள்; சந்திக்கவே முடியாமலிருக்கும்.

சில அலுவலகங்களில். அலுவல் பெற வருபவர்களுக்கு வரிசை ஒழுங்குபற்றி வகுப்பு நடாத்தி அவர்களை வரிசையில் காத்திருக்க வைத்துவிட்டு. திடீரென நுழையும் தனது உறவினருக்கு உதவி செய்து அனுப்புகின்ற வாய்ப்பேச்சு வீரர்களையும் சர்வ சாதாரணமாகக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும். அடுத்தவருக்கு உதவுவதைப்போல. அயலை நேசிப்பது போல. சூழலைப் பேணுவது போல இன்னும் பல விடயங்களில் மனம் வைத்துச் செயலாற்றின் எமது ஈழத் திருநாட்டில் அதற்கான தொரு பண்பாட்டை இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்களாவோம்.



**"நாளைக்கு லீவு முடிஞ்சுபோறன்.... வீடு மட்டு மல்ல நாடும் நலமாய் இருக்கவேணும். இனி நான் திரு மண வீட்டிற்கு வாறதா இல்லையா எண்டது உங்கட கையிலதான் இருக்குது"**



# பெறுமதி

வெளியில் எறித்துக் கொண்டிருந்த வெயிலைப் போல அண்ணாவின் மனமும் அனலாய்ப் புளுங்கிக்கொண்டிருந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளக்கூடாது என்பதற்காக, எந்த உணர்ச்சியும் இல்லாதது போல முகத்தை வைத்துக்கொண்டார். வெப்புகாரம் அனல் மூச்சாய் வெளிவருவது, அவர் நெஞ்சுப்பகுதி ஊதிச் சுருங்குவதன் மூலம் தெரிந்தது.

அக்காவின் மனசுக்குள்ளேயும் ஏதோ சிக்கல். குசினிக்குள்ள போவதும் திரும்பி வாறதுமாய் இருந்தா. கொழுத்தும் வெயிலில் கழுவிக் காய்ந்து கொண்டிருந்த குரக்கனை, இதோட ஐந்தாவது தடவையாகப் போய்க் கிளறி விட்டிட்டு வாறா. அக்காவிற்கு மட்டும் வெயில் சுடேலயோ தெரியாது. அண்ணைக்குத்தானே கலியாணம், அதற்கேன் அக்கா அமைதியற்று இருக்கிறா.

பதினேழு வருசத்திற்குப்பிறகு அந்நிய நாட்டில இருந்து அண்ண வந்து பதினைந்து நாள்தான் ஆகுது. அண்ண வந்த அடுத்தடுத்த நாளிலேயே அம்மா வன்னிக்குப் போனா. எங்கேயோ முக்கிய பணியில் நிண்ட அக்காவ, விடாப்பிடியா நிண்டு கூட்டுக் கொண்டு வந்திட்டா. அவவின்ட லீவு முடிஞ்சு நாளைக்குப் போயிடுவா.

இந்த வெயிலுக்கேயும் அவ இப்படி நிக்கிறா. அது அவவிற்குப் பழக்கம் போலக்கிடக்குது. அண்ணாவும் வீட்டுக்குள்ள இருந்து வெளியில் வந்தார். வேம்புக்குக் கீழே கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி கிடந்தார். மறந்தும்கூட அவர் காலை ஆட்டவே இல்லை. வேப்ப மரத்துக்குக் கீழ நல்ல காத்து வீசிக்கொண்டிருந்தது. அண்ணையின் நெற்றியில் வியர்வை இருந்தது. கடந்து சென்ற அந்த

**-அ.காந்தா-**

இடம் பெயர்வின் அழிவுக்கையும் இந்த வேம்பு மட்டும் உயிர்தப்பி இருந்தது அதிசயம் தான். வேம்புக்கும் அண்ணாவுக்கும் ஒரே வயசு எண்டு ஐயா சொல்லுவார்.

அக்காவும் வேம்புக்கு கீழ போனா. றபர் கதிரைய இழுத்துப் போட்டுக் கொண்டு அண்ணைக்குப் பக்கத்துல இருந்தா. அவவிற்குப் பக்கத்தில போய் வீட்டு நாயும் நிண்டுது. அக்காவக் கண்ட நேரந் தொடங்கி வெருண்டு வெருண்டு குலைச்சுக் கொண்டு நிண்ட நாய், ஒரு நாளில அக்காவோட ஒட்டிக் கொண்டது. அவ என்ன வசியம் செய்தாவோ தெரியாது. நாலு நாளில நல்ல சினேகிதமாய்க் கிடக்குது. பக்கத்தில போய் நிண்டதும் அக்கா அதைத் தடவினா. அதோட அவவின்ட காலுக்குக் கீழ படுத்திட்டுது.

**கதை அமுதம்**

அக்காவத் திரும்பிப் பார்த்திட்டு அண்ண அப்படியே இருந்தார். அக்கா வந்ததில இருந்து நிறையவே கதைச்சவர். இப்படியாயிற்றார். அண்ணாவை உற்றுப் பார்த்துவிட்டு. "அண்ணா இது என்ன கையிலும் கழுத்திலும் வீங்கிச் சிவந்து போய் இருக்குது. கொள்ளி எறும்பு கடிச்சிட்டுது போல கிடக்குது"

அவர் மெல்லிய புன்னகை உதிர்த்துவிட்டு அப்படியே இருந்தார். ஒன்றரைச் சகாப்தங்களுக்குமேல் அன்னிய தேசத்தில வாழ்ந்ததில் நிறம்மாறிப் போய் இருந்த தோல் பளபளத்துக் கொண்டிருந்தது. எறும்பு கடிச்சதே அவருக்குத் தெரியாது. தியானத்தில் இருப்

பதுபோல சலன மற்று இருந்தார். பக்கத்தில அக்கா வும் அமைதியாக இருந்தார்.

அண்ணா ஓ\எல் எழுதிவிட்டு விடுதலைப் போருக் காக போயிட்டார். கொஞ்சக் காலத்தில இந்திய இராணுவம் வந்திட்டுது. இதுதான் சாட்டெண்டு அம்மா போய் அழுது குழறி ஒருமாதிரி அண்ணை யின் மனசை மாத்திக் கூட்டிக்கொண்டு வந்திட்டார். பேந்தென்ன, வெளிநாட்டு உழைப்பில இரண்டு அக்காமாரும் கரை சேர்ந்திட்டினம். இன்னும் இரண்டு பேருக்குச் சீர்வரிசையோட திருமணம் செய்து வைக்கவேணும் எண்டதுதான் அம்மாவின்ட ஆசை. ஆனா ஒரு அக்காவிற்கு அது பாவற்காய். மற்றவ படிச்சுக்கொண்டிருக்கிறா. பட்டம் பெற்றால் தன்ர காலில் நிற்பா. அதற்கிடையில அவவுக்கு சம்மந்தம் வந்து சேர்ந்திட்டுது. அதுதான் அவவின்ர திருமணத் திற்கு முதல் அண்ணைக்கு செய்து வைக்க ஐயாவும், அம்மாவும் தீர்மானம் செய்திட்டினம். அண்ணா வாறதுக்கு ஆறு மாதத்திற்கு முன்னரே புரோக்கர் வந்து போகத் தொடங்கி விட்டார்.

அண்ண வந்ததும் கலியாணக் கதையக் கதைச் சினம். அவர் பெண் பார்க்கப் போகும் மட்டும் சிரிச் சுக் கொண்டு மகிழ்ச்சியாகத்தான் இருந்தார். வன் னிக்குப் போய் நேற்றுமாலை தான் வந்து சேர்ந்திச் சினம்.

போகேக்க முகமாலை செக்பொயின்றில வைச்சி கனக்க விசாரிச்சினம். அம்மா கடுமையாக நிண்டா. அதோட விட்டிட்டினம்.

புரோக்கர் சகிதம் அண்ணா, அக்கா, அம்மா, ஐயா இன்னும் இரண்டு பேர் எண்டு எல்லோரும் அங்க போனவையள். ஒரு சின்ன அழகான வீடு. வாசலில வந்து வரவேற்றார்கள். முற்றம் நிறைய மலர்ச் செடி கள். றோசாச் செடிகள் ஒவ்வொரு நிறத்திலும் பூத்துக் கிடந்தன. முற்றமென்ன காணி முழுவதும் ஆங் காங்கே பூக்கும் செடிகள்தான். ஓர் அழகுச் செடி களோ, குரோட்டன் இனமோ இருக்கவில்லை. இந் தக் கடும் வரட்சியிலும் வாழைகள் நல்ல செழிப்பாய் நிண்டது.

இன்முகத்துடன் கூட்டிச் சென்று இருத்தினார்கள். அக்கா மட்டும் ஒரு தடவை நெற்றியைச் சுருக்கி விரித்தா. யாருக்கும் கேட்காதபடி சொன்னா. “இஞ்சை இதுக்கு முதலும் வந்திருக்கிறன் போல கிடக்குது” எண்டா. அண்ணாவின் முகம் புன்சிரிப்பைத் தொலைக் காமலே இருந்தது.

உள்ளே சென்று இருந்து சுதாரித்தபின் வீட்டுச் சுவர்களை நோட்டமிட்டார்கள். வாசலுக்கு நேராக உள்ள சுவரில் தேசியத் தலைவரின் சிரித்த முகப்படம் கொழுவப்பட்டிருந்தது. இடது பக்கம் பலகை அடித்து மூன்று படங்கள் வைக்கப்பட்டிருந்தன. படங்களின் தலைக்கு மேல் வீரவணக்கம் என்று பெரிதாக எழுதிய எழுத்துக்கள்.


முதலில் அக்கா எழுந்து சென்று அதைப் பார்த் தாள். அதற்கிடையில் அம்மா ஐயா இருவரும் பெண் வீட்டுக்காரருடன் கதைக்கத் தொடங்கி இருந்தார் கள். ஊர்க்கதைகளும் வெளிநாட்டுக் கதைகளும் அடி பட்டது.

படங்களைப் பார்த்த அக்காவின் கண்கள் கலங் கின. நீர் முட்டிக் கொண்டுவந்துவிட்டது. அதைக் காட்டக் கூடாது என்று நினைச்சிட்டா போல, தூசு பட்டுவிட்டது போல பாசாங்கு செய்தா. மனதை முகம் காட்டிக் கொண்டிருந்தது. யாரும் கண்டு கொண்டதாக இல்லை. அந்தப் படங்களை நோக்கி அண்ணா எழுந்து சென்றார். மூச்சு விட மறந்தது போல திகைத்து நிண்டார். அவர் கள் இருவரையும் எவரும் கவனித் ததாக இல்லை. மற் றவர்களின் கதை கள் சிகரத்தைத் தொடுவதாய் இருந் தன.



அண்ணா மெல்ல முணுமுணுத்தார். “இவரை எனக்குத் தெரியும்.... நானும் இவரும் ஒண்டாய் பயிற்சி எடுத்த னாங்கள். அம்மா வந்து என்ன வீட்ட கூட்டிக் கொண்டு போகேக்க இவன் சரியாகக் கவலைப்பட்டவன். தனக்கும் தங்கச்சியாக்கள் இருக்கு. அதுகள் என்ன செய்யப் போகுதுகளோ தெரியாது எண்டவன். ஐயோ!.... இவன் வீரச் சாவே.... கடவுளே நான் எங்கேயோ இருந்து இஞ்சயே வந்திருக்கிறன். இது எவ்வளவு நல்லதாய்ப் போச்சுது...”

முணுமுணுத்து முடிந்த பின்னும் அக்கா அவரின்



வாயையே பார்த்துக்கொண்டிருந்தா. படங்களுக்குப் பூக்கள் வைக்கப்பட்டிருந்தது. அதை அவர்கிட்டவாகச் சேர்த்து விட்டார். அக்கா அவரின் ஒவ்வொரு துளி அசைவையும் பார்த்துக் கொண்டிருந்தா. அண்ணாவின் கண்கள் பிரகாசித்தன. படங்களில் உள்ளவர்களையே பார்த்துக்கொண்டு நிண்டார். பக்கத்தில் உள்ள படம் அவரது தங்கை என்பது வாசித்த பின்தான் விளங்கியது.

''ஐயோ பாவங்கள், இரண்டுபேருமே வீரச் சாவா....'' எண்டு மறுபடியும் முணுமுணுத்தார்.

சிற்றுண்டி, தேநீர் வந்துவிட்டது. இருவரும் வந்தமர்ந்தார்கள். அண்ணாவின் புன்னகை ஒரு சென்ரி மீற்றர் விலகி இருந்தது. அக்கா மட்டும் புலனாய்வாளனைப் போல வாயைத் திறக்காது சூழலைக் கிரகித்துக் கொண்டிருந்தா. அண்ணா இப்போது எதையும் பெரிதாக நினைத்துக் கொள்ளாதவர் போல இருந்தார்.

அல்பங்கள் கொண்டுவந்து கொடுத்துவிட்டு ஒருத்தி போனாள். அவளை அக்கா கண் இமையாது பார்த்துக் கொண்டு இருந்தா. அவவிற்குத் தெரியும், இவள் வீரச் சாவடைந்தவளோடு இரணையாகப் பிறந்தவள் என்பது. அக்காவை அவர்கள் அடையா



என்ன பக்கத்து ஊர் டாக்டர் கால் நடையாய் நடந்து போகிறார்!?

அவர்தான் கால்நடை வயித்தியர் ஆயிட்டே...

ளம் கண்டு கொள்ளவில்லை. அவவும் அப்படித்தான் எதையும் உடனடியாக வெளிக்காட்டிக் கொள்ள மாட்டா. அண்ணா அல்பத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். பெண்பிள்ளையின் அம்மா சொன்னா.

''தம்பி மற்ற அல்பத்தில வீரச்சாவடைஞ்ச பிள்ளையிடதும், தம்பியிடதும் படங்கள் இருக்கு.''

அண்ணை அவற்றை சுவாரசியமாகப் பார்த்தார். இடையில் பார்ப்பதை நிறுத்திவிட்டு பக்கத்தில் இருந்த அவர் தங்கச்சியின் முகத்தைப் பார்த்தார். மறுபடியும், அல்பத்திலுள்ள படத்தைப் பார்த்தார். அவளைப் பார்த்தார். எதுவும் கதைத்துக்கொள்ளவில்லை.

சற்று நேரத்தில் அக்கா அல்பத்தைப் பார்த்தா. அண்ணாவின் பார்வைக்கான அர்த்தத்தைப் புரிந்து கொண்டாள். ஒரு சண்டைக்குப் போகுமுன்பு இப்போ படமாக இருப்பவளும் அக்காவும் நின்று எடுத்த படங்கள் இருந்தன. அண்ணா அக்காவின் முகத்தைப் பார்த்தார். அவவின் முகத்தில் மாற்றம் இல்லை. வார்த்தைகளும் வரவில்லை.

அந்த நேரம் தான் அம்மா கதைத்தா. ''சரி எல்லாம் கதைச்சிட்டம். இனிச் சீதனம் தான்....'' பெண்பிள்ளையின் அப்பா கேட்டார். ''சரி நீங்கள் என்ன எதிர்பார்க்கிறியள் எண்டு சொன்னால் தானே தெரியும்....''

''ஏன் புரோக்கர் சொல்லலயோ... நாங்களும் பெண் பிள்ளையள வைச்சிருக்கிறம் அதுதான்....''



அப்பா! அண்ணா புதுசா வாங்கின சேட்டை அநியாயமாகக் கசக்கிறான். உங்களோடு சண்டையா?

இல்லை மகனே. அண்ணா சின்ன வயசில படிக்கும்போது ரீச்சர் - "கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு" என்று கூறினாவாம். அதைத்தான் வளர்ந்த பிறகும் பின்பற்றுகிறான்.

அம்மா சுவிங்கம் மாதிரி இழுத்தா. "இல்ல சொல்லுங்கோ செய்வம்'' என்று அந்த அப்பா நறுக்கெண்டு கேட்டார்.

''இல்ல ஒரு கிலோவிற்கு கிட்டத்திட்ட வரக்கூடிய மாதிரி நகையும் ஒருகோடிகிட்டத்தட்ட வரக்கூடிய மாதிரி காசும் தந்தியள் எண்டா போதும்.'' அந்த அப்பாவின் பெருமூச்சு தோல் அசைவில் தெரிந்தது. ஐயா சொன்னார் ''ஏதோ பார்த்துத் தாங்கோ...''

பெண்ணின் அம்மா சொன்னா "என்னங்க யாழ்ப்பாணத்து வீட்டவித்தா ஒரு கோடிக்குக் கிட்டவா கிடைக்குமெண்டா. நகைகளப் பார்த்துத் தேடுவது தான்.''

அம்மா கதைத்தா ''ஏன் உங்கட மகன் ஒண்டு வெளி நாட்டில இருக்குது தானே.''

''ஓ.... அவன் சின்னப்பெடியன். பாவம் படிக்கிற காலத்தில கஷ்டப்படுகுது. என்ன தொழில் செய்து எப்படிக் கஷ்டப்படுகிறானோ தெரியாது. அதோட அங்க ஏதோ படிக்கிறான் போலக் கிடக்குது. காசு கேட்டு அவனக் கஷ்டப்படுத்த எங்களுக்கு ஒரு சொட்டும் விருப்பமில்லை. அதோட அவன்ட சகோதரர்கள் இரண்டு இல்லாதது அவனுக்குக் கடும் கவலை. வீரச்சாவடைந்த இரண்டு பேருமே நல்லாப் படிப்பினம். அதுகள் இருந்திருக்க நிறைய உழைச்சிருக்குங்கள்!''

அந்த அம்மா கதைத்து முடிக்க அம்மாவும், ஐயாவும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். அண்ணாவின் எண்ணப்பாடுகள் பற்றி அவர்களுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. அவரை விற்பதற்கு விலைபேசுவதில் குறியாக இருந்தார்கள்.

அக்கா அண்ணாவைப் பார்த்தாள். அவரோ அதிர்ந்துபோய் இயல்பைக் காட்டாது இருந்தார். சீதனம் என்று அம்மா கேட்டதோட அக்காவுக்கு முகம் இருண்டது. அங்கிருந்த ஒவ்வொருவரது முகத்தையும், ஊடுருவிப் பார்த்த வண்ணமிருந்தாள். இடையிடையே அண்ணாவைப் பாக்கத் தவறவில்லை.

''சரியெண்டா புரோக்கரிட்டச் சொல்லி விடுங்கோ'' . எண்டா அம்மா. ஐயா தலையை ஆட்டினார்.

அந்த அப்பா சொன்னார் ''நல்ல தம்பியாக் கிடக்குது. இனி இவரை விட்டா வேற நல்ல பெடியன் கிடைக்கவே போகுது. பிள்ளைக்கும் வயது போகுது. அதோட இரண்டு பேரிண்ட கிரகங்களும் நல்லாய்ப் பொருந்துது. எப்படியாவது காசுக்கு ஏற்பாட்டச் செய்திட்டு, நானே நேரில் வாறன்.''

அம்மாவும், ஐயாவும் அவரின் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அண்ணாவுக்கு இனம்புரிபடாத ஏதோ ஒன்று தொத்திக்கொண்டிருந்தது. அதேவேளை அக்காவுக்கு சினம் சிரசிற்கேறிக் கொண்டிருந்தது யாருக்கும் தெரியாது. விடைபெறும் நேரம் நெருங்கியது. அப்போது அக்கா அங்கிருந்த படங்களைப்போய் மறுபடியும் பார்த்துக் கொண்டு வந்தாள்....

எல்லோரும் விடைபெற்றனர். அக்காவும், அண்ணாவும் பொய்யாகச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டார்கள். அக்காவை அவர்கள் யாரும் யார் என்று இனம் கண்டு கொள்ளவே இல்ல. உடை மாற்றமோ, அல்லது அவர்களின் அந்தநேர சூழ் நிலையோ தெரியாது.

வாகனத்தில் ஏறிக்கொண்டனர். அது ஊர்ந்தது. சத்தங்கள் இல்லாமல் எண்ணங்கள் ஓடியது. முதலில் அக்காவே அமைதிக்குத் தடுப்புப் போட்டா.

''அவையள் நல்லசனம். மிக நல்லதுகள்'' என்டதோட நிறுத்தினா.

அம்மா அடுத்ததாக தொடங்கினா. ''தம்பி நீ ஏன் யோசிக்கிறாய். உனக்குப்பிடிச்சாச் சரி''




ஏய் சூட்டி என்னடி இது. எல்லாரும் மோட்டார் சைக்கிள் ஓடும்போது தானே கெல்மெட் போடுவாங்க. நீ என்ன புதுசா ஸ்கூலுக்கு போட்டு கொண்டு வாறாய்..

இல்லை ஆர்த்தி! கிளாஸ் ரீச்சர் தினமும் எனக்குத் தலையில குட்டுகிறவ. வலி தாங்க முடியாமல் அப்பாவிடம் சொன்னேன். அவர் புதுசா கெல்மட் வாங்கி என்ர தலையில போட்டுவிட்டார்.

எண்டா.

அண்ணா வாய் திறந்தார். ''அம்மா இப்பவும் எனக்கு கால், கை நல்லாய் இருக்கு. இனியும் உழைப்பன்.... அவையள் தங்கச்சி சொல்லுறமாதிரி நல்லதுகள். இரண்டு பெறுமதியான உயிர்களை விலை கொடுத்து விட்டு இருக்குதுகள்!'' அதற்குப் பிறகு அண்ணா அமைதியானார்.

''தம்பி உன்ர தங்கச்சிக்கு ஒரு கிலோ நகையும், காசும் தாறம் எண்டு மாப்பிள்ளை வீட்ட சொல்லிப் போட்டம். அதைச் செய்யாட்டா மரியாதை இல்ல. வாழப் போறவள் வசதியாய்ப் போகவேணும். தங்கச்சிய நினைச்சுத்தான் அப்படிச் சீதனம் கேட்டனான். அல்லாட்டா எங்களுக்கென்ன காசு வாங்க




என்னாங்க.. சொல்லுறாங்கள்
'மச்' இரவில முடிஞ்சதா அல்லது றோவா முடிஞ்சதா...!

யாருக்குத் தெரியும் விடிய சிலோன் நியூஸ் பாப்பம்.

ஆசையே. ஒரு சதமும் வாங்க மாட்டம். இப்ப தங்கச்சியின்ர கலியாணத்திற்காக அதை வாங்கத் தான் வேணும். அல்லாட்டி இதில என்ன பெறுமதி....'' எண்டு அம்மா நிறுத்தினா.

தன் அண்ணாவிற்கும், சீதனம் வாங்குவதற்கும் சம்பந்தம் இல்லை என்பது அப்போது தான் அக்காவிற்குப் புரிந்தது. இது சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்படுத்திய திட்டம். அண்ணா மூலம் தங்கச்சிக்கு கொடுக்கலாம் என்ற முடிவு. அக்கா இப்ப நினைச்சா ''இவையளில என்ன பிழை. ஊரில நாட்டில இதுதானே நடக்குது...'' மீளவும் மௌனத்தைச் சுமந்தபடி வந்திறங்கினார்கள்.

ஐந்து நாளைக்கு முதல் அக்கா வீட்டிற்கு வந்திருந்தா. இங்க வந்து இந்த இடங்களைப் பார்த்தும் அவவிற்கு பழைய கள நினைவுகள் வந்திருக்க வேண்டும். முகத்தில் மகிழ்ச்சியே இல்லாமல் இருந்தது. ஆனா அண்ணையிட்ட மட்டும் ஏதோ விடுத்துவிடுத்துக் கேட்டா. என்ன வேலை செய்யிறியள். எத்தனை மணித்தியாலங்கள் ஓய்வு எடுக்கிறனீங்கள் என்டெல்லாம் பலதும் பத்துமாய்க் கேட்டா. அக்காக்கு நாட்டு நடப்புகள் தெரியாமல் விடாதுதான்.

அக்கா றபர் கதிரையில இருந்தபடி அண்ணாவின் முகத்தில் ஏதோ படித்துக்கொண்டிருந்தா. வீட்டில் மனங்கள் இரண்டு துருவங்களாக இருந்தன.


அக்காவே தொடங்கினா ''அண்ணா எறும்பு கடிச்சது நோகேலயே. ஏதாவது போடுங்கோ'' கோடு கீறினது மாதிரி சிரித்து விட்டு அக்காவைப் பார்த்தார். அவளே தொடர்ந்தாள்.

''அண்ணா எனக்கு அம்மாவோட மறுத்துக் கதைக்கத் தெரியாது. ஒண்டு சொல்லுறன் தங்கச்சி படிக்கிறவள், ஆளுமை உள்ளவள், தன்ர காலில் நிக்கக் கூடியவள். ஆனா நீங்கள் ஒரு ஆண்மகன். முப்பதைக் கடந்திட்டியள் உங்கட கருத்துகளச் சொல்லவும், முடிவுகளை எடுக்கவும் உங்களுக்கு உரிமையும், சுதந்திரமும் இருக்கு. வாழப்போறதும் நீங்கள் என்டதை நினைவில் வையுங்கோ.''

அவர் தங்கையின் கண்களை ஊடுருவிப் பார்த்தார். தலையை மெல்ல ஆட்டுவதா இல்லையா என்பது போலசுள்ள சிந்தித்தார். அக்கா மறுபடியும் சொன்னா.

''நாளைக்கு லீவு முடிஞ்சுபோறன்.... வீடு மட்டுமல்ல நாடும் நலமாய் இருக்கவேணும். இனி நான் திருமண வீட்டிற்கு வாறதா இல்லையா எண்டது உங்கட கையில தான் இருக்குது'' அந்த இடத்தில இருந்து அக்கா எழுந்து கொண்டா.

# பொன்னாடை எனக்குப் பொருத்தமில்லை...?



பிள்ளையார் கோவில் அரசமரத்தின் கீழே கூட்டம் கூடியிருந்தது. தலைவர் மிகவும் உரத்த தொனியில் பேசிக்கொண்டிருந்தார். ''எல்லாக் கோவில்களும் இடித்துக் கட்டப்படுகின்றன. எங்களுடைய கோவில் மட்டும் அப்படியே கிடக்கிறது. ஆகவே இதைப் புதுப்பித்துக் கட்டவேண்டு மென்று நான் விரும்புகிறேன். அதற்கான உங்களுடைய ஆலோசனைகளைக் கூறவும்.''

ஒருவர் தமது ஆலோசனையைக் கூறினார்.

''சிறிதாக அமைந்திருந்த கோவில்களும் அரைகுறை யான நிலையில் இருந்த கோவில்களும் புதுப்பிக்கப்படு தல் ஞாயமானதே. ஆனால் நல்ல நிலையில் உள்ள கோவில் களை இடித்துக் கட்டுதல் என்பது ஞாயமில்லாத ஒரு செயலாகவே கருத முடியும். ஆகவே கட்டிடத்திற் கான வர்ணந் தீட்டுதலை மட்டும் செய்து ஆலயத்தைப் புதுமெருகூட்டலாம் என்பது எனது கருத்து''.

சபையில் உள்ளோர் அவர் கூறிய கருத்தை ஆமோதித்தனர். விரைவில் வேலைகள் தொடங்கப்பட்டன. பிரபல்யமான ஓவியர் சதாசிவத்தாரின் மேற்பார்வையில் ஆலயக் கட்டிடத்திற்கான மை தீட்டும் வேலை திறமையான முறையிலும் விரைவாகவும் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றது.

கட்டிட வேலைகளைச் செய்தவர்களுக்கான கௌரவிப்பும் நடைபெற்றது. சதாசிவத்தாரும் அழைக்கப்பட்டிருந்தார். அவருக்குப் பொன்னாடை போர்த்துவதெனத் தெரிவித்து அதற்கான ஒழுங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சதாசிவத்தார் பரிபாலன சபையாரிடம் கேட்டார் – எதற்காகப் பொன்னாடை போர்க்க விரும்புகிறீர்கள்?

தங்களுடைய திறமையான ஓவிய வேலைகளின் பொருட்டே பொன்னாடை போர்க்க விரும்புகிறோம் என அவர்கள் தெரிவித்த போது சதாசிவத்தார் சொன்னார்.

''என்னுடன் வேலை செய்தவர்கள் பழைய பூச்சுக்களை சுரண்டித் துப்புரவு செய்து தராது போனால் எனது வேலைகளை சிறப்பானதாகச் செய்திருக்க முடியாது. ஆகையால் எனக்கு மட்டும் பொன்னாடை பொருத்தமில்லை'' என்று கூறி மறுத்துவிட்டு அவ்விடத்தை விட்டகன்றார்.

# கடவுளும் நானும் பிச்சைக்காரனும்



ஒற்றைப் பனையளவில்
உயர்ந்தெழுந்த கோபுரமும் – உள்வீதி
சுற்றியமைந்த மதிற்சுவரும்
மென்னிரும்பிற்
செப்பைக் கலந்து செய்த பெரும் முன்கதவும்
சித்திரமும்
சிற்பப் பொலிவுகளும்
சீமெந்தில் வெண்பளிங்குக்
கற்பதித்த மென்தரையும்
கருவறைமுன் வெள்ளிக் கொடிமரமும்
பொற்கலசம் தோரணங்கள்
பூண்ட புதுத்தேரும்
பொலிந்து அழகுசெய்ய
பின்புறமும் முன்னும் இன்னும்
எட்டுத்திசையும் ஒலிபெருக்கி
ஒரு சோடி
நட்டுவத்து மேளம்
நாதஸ்வரக் கூட்டு
பித்தளையிற் செய்த பெரிய மணி – பண்
சொட்டும் புதுச் சுருதிப்
பெட்டியுடன் பொற்றாளம் .... பொலிவுற்றின்
சத்தக்கலவை செவிப்பறையின்
சவ்வில் அறைய அமைந்திருந்த
ஆலயத்தின் உட்புகுந்தேன்!

சந்தனமும் குங்குமமும்
சாந்துத்திருநீறுஞ் சுமந்தபடி
குங்கிலிய வாசனையிற் குளித்தெழுந்து
மந்திரத்தின் அர்ச்சனையில்
மனதைப் பறிகொடுத்து
மகிழ்ந்து அமர்ந்திருந்த
ஆண்டவனைக் கை தொழுதேன்!
பக்திமழை
சிந்தி மனம் நனைக்கப்
பரவசமாய் வெளிவந்தேன்!


அருகிருந்த உண்டியலில்
வேண்டுதலாய் – நான்
போட்ட புதுப்பணத்தாள்
பார்த்து வெறித்து நின்றான்
ஒட்டி உடல் மெலிந்து
உயிரை மட்டும்
கெட்டியுடன் பற்றிக்
கிழிசல் உடுத்துக் கூனிக்
கை ஏந்திநின்ற – ஒரு
காலை இழந்த
கிழப் பிச்சைக்காரன்!

கவிதை

–ஜெ.பிறேம்குமார்


சிரிக்க விருப்பமா...?
பேரன் : பாட்டி! நீங்கள் இன்று சாகப்போகிறீர்கள்.
பாட்டி : ஏனடா அப்பிடிச் சொல்லுகிறாய்?
பேரன் : நீங்கள் இன்று இறந்து விட்டதாகத்தான் நாளை லீவுக் கடிதம் கொடுக்கப் போகிறேன்.
ஒருவன் : உங்க மகளைக் காணவில்லை என்றீர்களே! தேடிப்பார்க்கவில்லையா?
மற்றவர் : எதிர்வீட்டுப் பையனையும் காணவில்லையாமே!
ஒருவன் : எனது மனைவி எந்த விஷயமானாலும் மணிக்கணக்கில் பேசுவாள்.
மற்றவன்: ப்பூ.. இவ்வளவுதானா? எனது மனைவிக்கு விஷயமே தேவையில்லை. நாட்கணக்கில் பேசிக்கொண்டே இருப்பாள்.
ஆசிரியர் : அந்த எலும்புக்கூடு பெண்ணுடையது என்று எப்படி உறுதியாகச் சொல்கிறாய்?
மாணவன் : அதன் வாய் திறந்தபடியே இருக்கிறதே!
ரவி : ஏண்டா ராஜா. உன்னுடைய கையெழுத்து இவ்வளவு மோசமாக இருக்கே. வடிவா எழுதக் கூடாதா?
ராஜா : இல்லடா. அப்பா என்னை டாக்டருக்குப் படிப்பிக்கப் போறாராம். இது பரவாயில்லையே.
தங்கை ஏன் அழுகிறாள்?
குட்டிக்கதை சொல்லச் சொன்னாள்?
சொல்லுவது தானே?
'குட்டி'க் கதை சொன்னேன். அதுதான் அழுகிறாள்.
அம்மா : ஏண்டா பூச்சி மருந்து குடிக்க மாட்டேங்கிறே.
மகன் : நீங்க தானே உயிர்களைக் கொல்லுறது பாவமெண்டு சொன்னீங்க.
அம்மா :.................?
மாணவன் : பிச்சைக்காரனா நடிச்சதுக்குப் பரிசு கிடைச்சுதாமே! என்ன பரிசு?
மாணவன் : பிச்சைக்காரனுக்கு எது வேணுமோ? அது. அதாவது திருவோடு.
மனேஜர் : எத்தனை முறை பைல்களைக் கொண்டு வரும்படி கத்தினேன். காது கேட்கவில்லையா?
பணியாளர் : நீங்கள் தூக்கத்தில் உளறுவதாக நினைத்துவிட்டேன்.

# கலை இலக்கியக் கலாதிகள்






## ஆபிரகாம் லிங்கனை வென்ற பூதப்பாண்டியன்

விருது பெறும்
நூலின் பெயர் : மக்களால், மக்களுக்காக.
எழுதியவர் : பூதப்பாண்டியன்
போட்டி ஏற்பாட்டாளர் :
பூதப்பாண்டியன்
தேர்வுக் குழுத்தலைவர் :
பூதப்பாண்டியன்
வழங்கியவர் :
பூதப்பாண்டியன் (வலக்கை)
பெற்றவர் :
பூதப்பாண்டியன் (இடக்கை)
விழாத் தலைமை :
பூதப்பாண்டியன்
(பத்திரிகை அறிக்கைகளும் :
பூதப்பாண்டியனே)



பூதப்பாண்டியனை விமர்சித்துப் பூவரசன் இவ்வாறெழுதினார்.

## பூதனைப் பொருத பூவரசன்

பரிசு நூற் தேர்வுகள் இன்னும் கவனமாகச் செய்யப்பட்டிருக்க வேண்டும். பூவரசனின் 'பூமழை' போன்ற நூல்கள் கருத்திலெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.........

## அன்ரி – க்ளைமாக்ஸ்

கண்பார்க்க, மனம் பறக்கிறது. வாசிப்பு வேகத்திலும் மனோவேகம் மிக அதிகந்தான்.

பத்திரிகை படித்துக்கொண்டிருந்த பத்மனுக்குப் பரவசமாக இருந்தது.

"............. நெறிப்படுத்தலில் சினிமாப் படம்......" – ஆகா எங்கள் ஆட்களும் நெறியாள்கை செய்கிற அளவுக்கு இருக்கிறார்களே! – மேலே கண்களை ஓடவிட்டார்:

"............. பற்றிய கலந்துரையாடல் ..."

பத்மன், பேப்பரை மடித்து வீசினார்.

-சுதந்திரதீபன்

அஞ்சலி : கண்ணீர் துடைப்பதற்கு சொற்களால் நெசவு செய்யப்படும் கவி[illegible]குட்டை.
தண்ணீர் : உயர்வு தாழ்வு தெரியாத சமநிலை காணும் சமதர்மவாதி.
புகை : தீ உமிழும் எச்சில்
சத்தம் : நாகரீக உலகின் சங்கீதம்
சீதனம் : விவாக நிவாரணம்
பந்தி : சமையல் கலையின் விமர்சனக் கூட்டம்.
விமர்சகர் : கதை, கவிதை கனம் சீர்தூக்கிப் பார்க்கும் இலக்கியப் பயில்வான்.
சேவல் : மனிதன் சமைத்துச் சாப்பிடும் அலாரம் மணிக்கூடு.
எழுத்து : தாளின் நிர்வாணத்தை மூடும் ஆடை.
சிகரட் : இயமனை ஊதி அழைக்கும் குழல்.
அபேட்சகர் : தேர்தல் காலம் பிரசன்னமாகும் கும்பிடு பூச்சி.

## உனக்கு மட்டும் எப்படி?

பிரபல பிரெஞ்ச எழுத்தாளரான பால்சாக் என்பவரின் வீட்டுக்கு ஒரு நாள் இரவு, திருடன் ஒருவன் சென்றிருந்தான். உள்ளே சென்றவன் மேசை லாச்சிகளைத் துளாவித் துளாவிப் பார்த்துக் கொண்டிருந்தான். இதை மறைவிலிருந்து கவனித்த பால்சாக் இரக்கப்பட்டுச் சொன்னார்.

"பகல் முழுதும் தேடித் தேடி மேசைக்குச் சொந்தக்காரனான எனக்கு அகப்படாத காசு, இரவில் உனக்கு மட்டும் எப்படி அகப்படப் போகிறது."



## தலை போய்விட்டது


நடந்து முடிந்த சண்டையொன்றின் போது, எதிரியின் காலொன்றை வெட்டிக் கொண்டு வந்தான் சிப்பாய் ஒருவன். அவனைப் பார்த்து இன்னொருவன் கேட்டான், எதிரியின் தலையை வெட்டாமல் காலை ஏன் வெட்டினாய்? என்று.

"நான் என்ன செய்வது? தலையை வேறொருவன் முன்னமேயே வெட்டிக் கொண்டு போய் விட்டானே" என்றான் நிதானமாக.



அது ஒரு பொது வைத்தியசாலை. தமது நோய்க்குக் குளிசைகள் பெற்றுக்கொள்வதற்கு வாங்குகளில் நோயாளர்கள் அமர்ந்திருக்கிறார்கள். இரத்த அழுத்தம் குறைவதற்குப் போடப்படும் குளிசைகளுக்காகவே நோயாளர்கள் அதிகம் பேர் இருந்தனர்.

ஓர் இளைஞன் காலை நொண்டி நொண்டி குளிசைகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னுக்கு




**-அரஸ்-**

# மனிதாபிமானம் மறையவில்லை

வருகிறான். அப்போது முன்வரிசையில் இருந்த பெண் ஒருவர் வாய்க்கு வந்தபடி இளைஞரை ஏசித் தீர்க்கிறார். இளைஞன் பின்வாங்கியபடி தனது நிலைப்பாட்டை அந்தப் பெண் மணிக்குச் சொல்கிறார். ‘‘நான் வத்திராயனைச் சேர்ந்தவன். பேரலைத் தாக்கத்தினால் உறவுகளை இழந்தேன். எனது குடும்பம் பதினொரு பேரைக்கொண்டது. ஒன்பது பேரை இழந்து நானும் அம்மாவும் தான் தப்பி உள்ளோம். அம்மாவும் காயத்துடன் ஆஸ்பத்திரி வார்ட்டில் இருக்கிறார். அம்மாவுக்குத்தான் இந்தக் குளிசைகளைப் பெற்றுக்கொள்ள வந்தேன்’’ என்றார்.

இதை ஆழமாகக் கேட்ட, ஏசிய பெண்மணி மனத்தில் கருணை பிறந்தது. தான் ஏசியதற்காக மன்னிப்புக் கேட்டார். தனது கைப் பையைத் (பேர்ஸ்) திறந்து ஆயிரம் ரூபா தாளை எடுத்து இளைஞனிடம் கொடுத்தார். ‘‘இந்தக் காசு தான் தற்போது உள்ளது’’ என்றதும் இளைஞனின் கண்கள் பனித்தன.

இளைஞன் திரும்பி வரும்போது இன்னொரு பெண் மணி இளைஞரை அழைத்து அவனின் சோகக் கதையைக் கேட்டார்.

தனது கைப் பையைத் (பேர்ஸ்) திறந்து காசு தேடினார். காசு பெரிதாக இருக்கவில்லை.

## உண்மைச் சம்பவம்.


ஒரு கணம் யோசித்துவிட்டுத் தனது கையில் இருந்த ஒருபவுண் மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தார். ‘‘இதனை விற்றுவிட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்’’ என்றார்.

இளைஞன் அடியோடு அதை மறுத்தார். ‘‘உங்கள் கருணைக்கு நன்றி’’ என்றார். ‘‘நான் இருக்கும் இக்கட்டான சூழ்நிலையில் மோதிரத்தை விற்கக் கொண்டு சென்றால் கள்வன் என என்னைக் கடை உரிமையாளர்கள் சொல்வார்கள்’’ என்றார். அத்துடன் பிணங்களில் இருந்து கழற்றியது எனச் சொல்லவும் வாய்ப்புண்டு என்றார்.

உடனே அந்தப் பெண்மணி குறிப்பிட்ட ஒரு நகைக் கடைக்குக் கடிதம் ஒன்றை எழுதிக் கொடுத்து, மோதிரத்தையும் கழற்றிக் கொடுத்தார்.

இதனைக் கல்லுக்குள் ஈரம் என்பதா? அல்லது மனிதாபிமானம் மறையவில்லை என்பதா?

எது எப்படி ஆயினும் காசு கொடுத்தவர் சுதுமலையைச் சேர்ந்தவர். மோதிரம் வழங்கியவர் அரியாலையைச் சேர்ந்தவர். இது கருணை பிறக்கும் நேரம்.



நான் இன்டைக்கு ஒரு மணித்தியாலமாக ஒரு வெள்ளைக் காரனோடு சரளமாய்க் கதைச்சனான்.

உனக்குத்தான் இங்கிலீஸ் தெரியாதே... அதெப்படிக் கதைச்சனீ?

அவனுக்குத் தமிழ் சரளமாய் தெரியும்... அதுதான்...

வீ.ஏ.விந்தன்

# யார் முதலில் தொட்டது



ஒருவர் மனநோயாளர் வைத்தியசாலை இருந்த வீதி வழியே நடந்து கொண்டிருந்தார். அவரது உறவினர் ஒருவர் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்ததால் அவருக்கான மதிய உணவைக் கொண்டு சென்று கொண்டிருந்தார்.

வைத்தியசாலை முன்புறத்தை அண்மித்த வேளை, வாசல்கேற்றின் மேலாக ஏறிய இருவர் இவரை நோக்கி ஓடி வந்தனர். இவர் பயந்தவராக வந்த வழியே திரும்பி ஓடினார். அவர்கள் விடுவதாக இல்லை. துரத்திக் கொண்டே இருந்தனர். உணவுக்காகத் தான் துரத்துகிறார்களோ என எண்ணியவராய்ச் சாப்பாட்டுப் பார்சலைக் கீழே வைத்து விட்டு ஓடினார். அதற்கும் அவர்கள் நின்றபாடாக இல்லை.

ஓடிக்களைத்த அவர் கல்லொன்று தடுக்கி விட, குப்புற வீழ்ந்து விட்டார். ஓடி வந்த இருவரும் அவருடைய அருகில் ஓடி வந்து காலைத் தொட்டு, ‘‘நான் தானே முதலில் தொட்டது’’ என்று சொல்ல, விழுந்து கிடந்தவர் அவர்களையே ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் இவரைத் தொடுவதற்கான போட்டி வைத்தது இவருக்கு எப்படித் தெரியும்?



## விரும்பியபடியே தருவேன்



முகலாயப் பேரரசரான அக்பர், கல்வியில் சிறந்தவர்களை அழைத்து, அவர்களைக் கௌரவித்துப் பரிசில்களையும் வழங்கி வந்தார். தனது பிறந்த நாளன்று இப்ப டிச் செய்வது வழக்கமாக இருந்தது.

ஒருமுறை, பீர்பால் என்ற அறிஞர் அக்பரின் அரசவைக்குச் சென்று பரிசில் பெற விரும்பினார். அதற்காக அரண்மனை வாயிலில் நின்றார். காவலர்கள் அவரை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

"காவலர்களே! என்னைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வாய்ப்பிருக்காது என்றே நினைக்கிறேன். நான் அரசரை ஒருமுறை சந்தித்து அவரை வாழ்த்தி அவருடைய ஆசீர்வாதம் பெற விரும்புகின்றேன். தயவு செய்து எனக்கு அனுமதி தாருங்கள்" என்று பணிவுடன் கேட்டார்.

அவர்கள் இணங்குவதாக இல்லை.

"அன்பர்களே! அரசர் என்னைப் பார்த்தால், நிச்சயமாக எனக்குப் பரிசில்கள் தருவார். தரும் பரிசுப் பொருட்களை இரண்டாகப் பிரித்து உங்களுக்குத் தந்து விடுகிறேன். என்னைப் போகவிடுங்கள்" என்றார் பீர்பால்.

லஞ்சம் பெறுவதில் அவர்கள் பழக்கப்பட்டவர்கள் போலும், அவர்கள் இப்போது சம்மதித்தார்கள். "வாக்குத் தவறக்கூடாது" என்று சொல்லி, "இதைப்பற்றி யாருக்கும் தெரிவிக்கக்கூடாது" என்றும் எச்சரித்து அனுப்பினர்.

அரசனைச் சந்தித்த பீர்பால், "அரசே! நெடுந்தொலைவில் இருந்து தங்களைக் காண்பதற்காக வந்துள்ளேன். எனது பெயர் பீர்பால். தங்களைக் கண்டுகொண்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்" என்றார். பீர்பாலின் அன்பான, அடக்கமான, தெளிவான உரையாடலில் மகிழ்ந்து போன அக்பர்,

"உம்மை மகிழ்விக்க விரும்புகிறேன். ஆகையால் உமக்கு என்ன பரிசு வேண்டும் கேளும்" என்றார். அதற்கு பீர்பால் "உங்களைக் கண்டதே போதும், பரிசு எதற்கு?" என்று மறுத்தார். அரசர் விடுவதாக இல்லை.

"நான் கேட்கும் பரிசை நிச்சயமாகத் தருவீர்களா?" என்று கேட்டார் பீர்பால். அவருக்கு இப்படியான ஒரு மன்னனின் வாயிற் காவலராக இருப்பவர்களின் முறைகேடான நடவடிக்கைக்குத் தக்க தண்டனை வழங்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. "நிச்சயமாகத் தருவேன்" என்றார் அக்பர்.

"எனக்கு நூறு கசையடி தாருங்கள். அது போதும்" என்றார்.

சபையிலுள்ள அனைவரும் திகைத்தனர். "இதென்ன வேடிக்கை? பெறுமதியான பொருட்களைக் கேட்பதை விடுத்து கசையடி தரும்படி இவர் கேட்கிறாரே. மனம் பேதலித்து விட்டதோ?" என எண்ணினர். மன்னனும் மனக்கலக்கத்துடன், கசையடி வழங்குவதற்காக வீரன் ஒருவனை அழைத்தார். வீரனும் சவுக்கை ஓங்கியவாறு பீர்பாலை நோக்கி வந்தான். அவனை நிறுத்தச் சொல்லிய பீர்பால் அக்பரை நோக்கி, "எனது பரிசுப் பொருளை இரண்டாகப் பிரித்துத் தருவதாக இருவருக்குச் சொல்லிவிட்டு வந்தேன். அவர்களிடமே கொடுத்துவிடுங்கள்" என்றார்.

எல்லாமே விந்தையாக இருந்தது. பீர்பால் கூறியபடி வாயிற் காவலர் இருவரும் அழைக்கப்பட்டனர். நடந்தவற்றை பீர்பால் சொல்ல பரிசு இரண்டாகப் பிரித்து ஆளுக்கு ஐம்பது கசையடி கிடைத்தது.

தனது அரண்மனையிலேயே நடந்த தவறினைத் சாதுரியமாகச் சுட்டிக் காட்டிய பீர்பாலுக்கு நிறையப் பரிசு கொடுத்தனுப்பினார் அக்பர்.

## நம்பிக்கையில்லை



சுந்தரமும் அவருடைய நண்பர்களும் ஒருமுறை சுந்தரம் வீட்டிலே சுவாரஸ்ரயமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுள் சங்கரி என்பவர் கடவுள் நம்பிக்கையைப் பற்றி எதிர்ப்பான கருத்துக்களைக் கூறிக் கொண்டிருந்தார்.

அப்போது சுந்தரம் அவரைப் பார்த்து "உங்களுக்குக் கடவுள் மீது நம்பிக்கையில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவரும் "இல்லவே இல்லை எனக்குக் கடவுள் நம்பிக்கையில் நம்பிக்கையே இல்லை" என்றார்.

"அப்படியென்றால், "கடவுளில் நம்பிக்கை இல்லையென்று சத்தியம் பண்ணுவீர்களா?" என்று சுந்தரம் கூற -

சங்கரியும் ஏதோ பெரிய இலட்சியவாதியைப் போல "கடவுளறிய எனக்கு நம்பிக்கையில்லை" என்றாரே பார்க்கலாம். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் வாய் விட்டுச் சிரிக்கச் சங்கரி செத்தவன் போல இருந்தார்.

-மாவன்னா-

## முட்டாள் தனமான கேள்வியும் முன்கூட்டித் தயாரான பதிலும்



நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கூண்டில் நின்ற சாட்சியொருவரைப் பார்த்து "சம்பவம் நடந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரத்திலிருந்து அதைப் பார்த்தாய்?" என்று வழக்கறிஞர் கேள்வியெழுப்பினார்.

"2 மீற்றர் 12 செ.மீற்றர் தூரத்திலிருந்து பார்த்தேன்" என்று படாரென்று சாட்சி பதில் சொன்னார்.

வழக்கறிஞருக்குச் சற்றுக் கோபமும் வந்துவிட, "அந்தத் தூரத்தை எப்படி இவ்வளவு சரியாகக் கணக்கெடுத்தாய்?" என்று வெருட்டினார்.

"இதுபோன்ற முட்டாள்தனமான கேள்விகள் இங்கே கேட்கப்படும் என்று தெரிந்ததால், முன்கூட்டியே அளந்து குறித்திருந்தேன்" என்று நக்கலாகப் பதிலளித்தார் அந்தச் சாட்சிக்காரர்.


# பிள்ளைக்கேற்ற பெயரா? 'எண்'ணிற்கேற்ற பெயரா?

## எண்சோதிடம் உருவாக்கும் கலாசார கருச்சிதைவுகள்

**சிரிப்பதற்காக மட்டுமல்ல சிந்திப்பதற்காகவும்**

**பண்பாட்டு அறிவியல்**

இன்றைய நவீன தகவல் பரிமாற்ற உலகில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுவதில் தமிழ்க் கலாசாரப் பண்பாடுகளைப் புறந்தள்ளி - வயிற்றுப்பிழைப்புக்காக தனது உடல் உழைப்பினைப் பயன்படுத்தாது சோம்பேறித்தனத்தை முன்னிறுத்தி, சோதிடம் கூறும் சோதிடர்களைப் பின்பற்றி பெயர் சூட்டுவதில் முனைப்புப் பெற்றுள்ளனர்.



இத்தகைய சோதிடர்கள் பலர் தமிழ் மாண்பினைச் சீர்குலைக்கும் தமிழ்ச்சொல், செயலுக்கு உட்படாத பல பிற மொழிப் பெயர் களையும், மொழிக்கு முன்வராத பல எழுத்துக் களை முன்னிறுத்தியும் தாம் ஏதோ பெரிய கண்டுபிடிப்புக் களை மேற்கொள்ளும் விஞ்ஞானிகள் போன்று எண்ணி, தான்தோன்றித்தன மாக நடந்து கொள்கின்றனர்.

இத்தகைய செயற்பாடானது, தமிழினத்தின் தன்மையினை சீர்குலைப்பதோடு, செழுமையான தமிழ்ப்பண்பாடு பிற மொழிக் கோர்வையால் சிதைவுற்றுப் போகின்றது. பண்டைய காலத்தில் எண்சோதிடத்தைப் பின்பற்றியா பெயர் வைத்தனர்? அவர்கள் நன்றாக வாழவில்லையா? பண்டைய தமிழர் நீண்ட ஆயுளும், நோய் நொடி அற்றும் வாழ்ந்த வரலாறும் உண்டல்லவா?.

எனவே நாம் எண்சோதிடம் என்பதை நம்பி ஏமாந்து தமிழ் பண்பாட்டினைச் சீர்குலைப்பான்? அப்படி எண் சோதிடத் தினை நம்பினாலும் தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் அமை வான இனிய தமிழ்ப் பெயர்களை வைக்கலாமே?

இதற்கு நாம் சங்கங்கள் கூடி வலியுறுத்துவதால் பெரிதாக ஏதும் எடுபடுவதாக இருக்காது. இதற்காக தமிழ் நிர்வாக அலகுகளில் எல்லாம் எழுதப்படாத சட்டங்களாக தமிழ்ப் பற்றினை ஊட்ட வேண்டும்.

1. பிறப்புப் பதிவினை மேற்கொள்ளும் மருத்துவமனைகள் மற்றும் பதிவாளர்கள் தமிழ்ப் பெயர்கள் இருந்தால் மட்டுமே பதிவினை மேற்கொள்ளல்.
2. பாடசாலை மற்றும் கல்லூரிகளில் தமிழ்ப் பெயர் உள்ள மாணவர்களுக்கே அனுமதி கொடுத்தல்.
3. தொழிற் கூடங்கள், தொழில் வழங்குநர்கள் தமிழ்ப் பெயர்கள் உள்ளவர்களை முன்னுரிமை கொடுத்துத் தேர்வு செய்தல்.

(மேலே கொடுக்கப்பட்டவை ஈழத்தமிழராக இருந்தால் மட்டுமே பொருந்தும். இல்லையெனின் ஏனைய இனங்களின் வாழ்வுரிமையைப் பறிப்பதாக அமைந்து விடும்)



இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றுவதால் ஓர் சமூகம் விரும்பியோ விரும்பாமலோ தமிழ் நாமத்தினை தமது பிள்ளைகளுக்குச் சூட்ட வேண்டிய கட்டாயச் சூழல் ஒன்று தோன்றி அபிவிருத்தியடைந்து பர்வல் அடையும்.

காக்கையின் கூட்டில் குயில் பிறந்தாலும் காக்கை மொழியில் குயில் பேசுவதில்லை என்பதை காசி ஆனந்தன் கவிதைகளில் படித்த ஞாபகம். ஆனால் எமது தமிழ்ச் சமூகம் - புலம் பெயர் சமூகமும் சரி உள்நாடும் சரி காக்கை மொழி பேசுவதிலேயே கவனமாக உள்ளனர்.

இவை தவிர்க்கப்படவேண்டும் இல்லாது போனால், மொழியின் அர்த்தங்கள் புரியாது எமது பிள்ளைகளுக்கு நாமே நாய், பூனை, கழுதை எனப் பெயர் வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றிவிடும். (திருப்பதி, அண்ணாமலை என ஊர்ப்பெயர்களை வைத்த இந்தியர்கள் இப்பொழுது லண்டன், கனடா என வைத்தால் என்ன என சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.)

உ-ம்:

ஜோன் சீயான் (சீயான் - பிரான் சிய மொழியில் நாய்)
ராஜ பல்ல (பல்லா - சிங்கள மொழி யில் நாய்)
சந்திரபட்டி (பட்டி - கன்னட மொழியில் நாய்)

இவையெல்லாம் புலம் பெயர் சமூகத்தில் ஏற்பட்ட அனுபவபப் பகிர்வுகளே. இதேபோன்று யாழ்ப்பாணத்தில் டிலக்சி, டுலக்சி, ஹர்சன், ஶ்ரீலதா, டர்சன், ஸ்ருநிதி, ப்ரியா என நீண்டு கொண்டு போகின்றன. இவையெல்லாம்களையெடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேலும் நகைச்சுவையாக எண் சோதிடம் பற்றி ஒரு கதையுண்டு. அதாவது செங்கமலம் என்ற தாய்க்கும் தணிகாசலம் என்ற தந்தைக்கும் ஓர் மகவு பிறந்தது.

இம்மகவிற்கு பெயர்வைக்கும் பொறுப்பு எண் சோதிடரிடம் விடப்பட்டதோடு ஒரு நிபந்தனையும் கொடுக்கப்பட்டது. அதாவது எண்சோதிடத்திற்கு அமைவாக தாயின் பெயரையும், தந்தையின் பெயரையும் இணைத்து மகவுக்குப் பொருத்தமான பெயர் சூட்ட வேண்டும் என்பதாகும்.

இதனடிப்படையில் எண்சோதிடர் தாயின் பெயரின் பிற்சேர்க்கையான மலம் என்பதையும் தந்தையின் பிற்சேர்க்கையான சலம் என்பதையும் இணைத்து மலசலம் எனும் புதியதொரு பெயரினை எண்சோதிடத்திற்கு அமைவாகக் கண்டுபிடித்துக் கொடுத்தார்.

இப்படிப்பட்ட அசிங்கமான எதிர் காலத்தை உருவாக்காது வளமான தமிழ் மொழி கொண்டு செழுமையான பெயர் சூட்டித் தமிழையும் எம்மையும் மேம்படுத்திக் கொள்வோம்.

புலம்பெயர்ந்தது தமிழரேயொழியத் தமிழல்ல;

நலங்குன்றியது நம் சிந்தனையேயொழிய நம் மொழியல்ல.

**-வரணியூர் ஜெயா**

## உண்மைச் சம்பவம்



எட்டு வருடகாலமாகத் தனது தலையினுள்ளே துப்பாக்கி ரவை ஒன்றோடு துக்கத்தினை அனுபவித்துக்கொண்டு உயிர்வாழும் அப்பாவிச் சிறுமி ஒருத்தி பற்றிய செய்தி ஒன்றினை. BBC இணைய வெப்தளம் குறிப்பிட்டிருந்தது. 13 வயதுடைய ஃபாத்திமா சஹறா் என்னும் பெயருடைய இந்தச் சிறுமி ஆஃப்கன் இனச்சிறுமியாவார். ஆப்கானிஸ்தானில் கலகக்காரர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையின் போது அந்தச் சிறுமிக்கு துப்பாக்கிச் சூடுபட்டுள்ளது.

அன்று அவளது தலைக்குப் பக்கமாக துளைத்துச் சென்று. அன்றிலிருந்து இன்றுவரை அவளை வேதனைப்படுத்திக்கொண்டு அவளது மூக்கிற்கு மேற்புறமாக தங்கி இருக்கும். இந்தத் துப்பாக்கி ரவை 1-2 அங்குலம் வரை நீளமானது என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

அந்தத் துப்பாக்கி ரவையைத் தனது உடலில் சுமந்த வண்ணம் ஃபாத்திமா 8 வருடங்கள் உயிர் வாழ்ந்தாலும் இப்பொழுது நிலைவரம் பயங்கரமான தன்மைக்குத் திரும்பியிருக்கிறது. அதாவது இந்தத் துப்பாக்கி ரவை துருப்பிடிக்க ஆரம்பித் திருக்கிறது. இதனால் விரைவாக துப்பாக்கி ரவையை அவளது உடலிலிருந்து அகற்றாது விட் டால், ஃபாத்திமா இறந்து போய் விடுவதற்கு இடம் உண் டென வைத்தியர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

துப்பாக்கி ரவையை அகற்றவேண்டுமானால், பாரதூரமான சத்திர சிகிச்சை ஒன்று நடக்க வேண்டும். இந்த விதமாக நுண்ணிய சத்திர சிகிச்சையை நரம்பியல் துறையில் சத்திரசிகிச்சை செய்யக்கூடிய ஒரு வைத்தியராலேயே முடியும். ஆனால், ஃபாத்திமாவும் அவளது தாயும் பெரிய சிக்கலுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. ஆப்கானிஸ்தானில் அதுபோன்ற நரம்பியல் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளக்கூடிய வைத்தியர்கள் இல்லாதமையாலேயேயாகும். இதன் காரணமாக தனது மகளது வாழ்க்கையை பாதுகாப்பது எப் படி என்ற கவலைக்கிடமான சிக்கலுக்கு ஃபாத்திமாவின் அநாதரவான தாயார் முகம் கொடுத்தாள்.

# எட்டு வருடங்களாக துப்பாக்கி ரவையைத் தலையில் சுமந்து திரிந்த ஒரு சிறுமியின் கதை!

ஃபாத்திமாவின் உடலினுள்ளே ஊடுருவியுள்ள இந்தத் துப்பாக்கி ரவையின் பாதிப்பினால் இதுவரைக்கும் ஃபாத்திமாவினுடைய ஒரு கண், பார்வையை இழந்துபோய் உள்ளது.

அதற்கு மேலாக அவள் அடிக்கடி கொடிய தலைவலியினால் அவஸ்தைப்படுவதாகச் சொல்லப்படுகிறது. விரைவாக ஏதாவது செய்யப்படவில்லையென்றால் தனது மகளுக்கு வேதனையோடு கூடிய கவலைக்கிடமான மரணம் ஏற்படுமென அஞ்சிய ஃபாத்திமாவின் தாயார், செய்வதற்கு எதுவுமே இன்றி . துணையின்றிக் காத்திருக்கின்றார்.

ஆசியாவில் யுத்தத்தினால் ஆதரவற்றுப்போன பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் சமூக சேவை நிறுவனம் ஒன்று ஜப்பானில் உள்ளது. 'Aid for War Orphans in Asia' என்ற அமைப்பே அது. சின்னஞ்சிறிய ஃபாத்திமாவுக்கு உதவி செய்வதற்கு ஜப்பான் நிறுவனம் முன் வந்தது. அந்தச் சந்தர்ப்பத்திலேயே ஃபாத்திமாவினுடைய சத்திரசிகிச் சைக்காக அவளை ஜப்பானுக்கு அழைத்துச் செல்வதற்கும், சத்திரசிகிச்சை யின் பொருட்டு. செலவாகும் 73,000 அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கும், மேற்படி நிறுவனம் (AWOA) பொறுப்பெடுத்துக் கொண்டது.

ஃபாத்திமாவுக்கு மீண்டும் வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வாய்த்தது. அவளும், அவளது தாயாரும் இதனால் மிகுந்த மகிழ்ச்சிக்கும், மன அமைதிக்கும் ஆட்பட்டார்கள். "என்னை இந்தவிதமாக சுகப்படுத்துவதன் பொருட்டு அழைத்து வந்த ஜப்பான் மக்களுக்கு நான் மீண்டும் மீண்டும் நன்றி கூறுகின்றேன்" சின்னஞ்சிறிய ஃபாத்திமா இவ்வாறு கூறுகின்றாள். இன்று வரையும் அவள் சத்திரசிகிச்சையின் பொருட்டு ஜப்பானி லேயே தங்கி இருக்கின்றாள். இந்த வாரத்திற்குள் அவளது சத்திரசிகிச்சையை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதோடு, இதன் பின்னர் அடுத்த செப்ரெம்பர் மாதம் வரை அவளுக்கு ஜப்பானில் தங்கி இருப்பதற்கு அனுமதியும் கிடைத்துள்ளது.

ஃபாத்திமாவினுடைய தலையில் உள்ள துப்பாக்கிரவை பற்றி தெரிந்து பொள்ள முடிந்தது. அடிக்கடி தலைவலி ஏற்பட்டதன் காரணமாக எக்ஸ்றே சோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோதே. எப்படியானாலும் இந்தச் சத்திரசிகிச்சையின் மூலம் அவளுக்கு மீண்டும் வாழ்க் கையில் ஒளி ஏற்படத்தான் போகிறது.


ஆனாலும், பாவம் அந்தச் சின்னஞ்சிறுமி என்ன இருந்தாலும் பறிபோய் விட்ட அவளுடைய இடது கண்ணின் பார்வையை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாதென்று சொல்லப்படுவது தான் பரிதாபத்திற்குரிய தாகும்.

✸

–இணையத்தளத்திலிருந்து தேவர் அண்ணா.



ஒருவர்: வீட்டில் மாமியும்,
மருமகளும் எப்படி?
மற்றவர் : வியட்நாம்,
பாலஸ்தீனம்,
ஆப்கானிஸ்தான்,
இலங்கை எல்லாம் ஒரே நேரத்தில் பார்க்கலாம்.



பேய் 1: பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பார்கள். நீ மட்டும் ஏன் அந்தப் பெண் மீது இரக்கமில்லாமல் இருக்கிறாய்?
பேய் 2 : நான் மனிதனாக இருந்தபோது இவள் எனது மனைவியாக இருந்தவளாச்சே...

## வேண்டாமெண்ணத் தருவேன்

சீட்டாட்டம் என்றால் ஏரம்பருக்கு ஒரே குஷியாகத்தான் இருக்கும். சாப்பாடே தேவையில்லை. கூட விளையாடுவ தற்கு யாரும் இல்லாத போதும் தன்னையே இருவராகப் பாவித்து விளையாடுவார். இந்த வேளைகளில் இவரது மனைவியே இவரைப் பார்த்து, "இந்தாளுக்கு விசராக்கப் போகுது" என்று ஏளனமாகப் பேசுவதுண்டு.

இப்படி ஒருநாள் இவர் தனித்திருந்து விளையாடிக் கொண்டிருக்க சாம்பசிவத்தார் கூப்பிட்டுக்கொண்டு அங்கே வந்தார். அவரைக் கண்டதும் ஏரம்பருக்கு ஒரே சந்தோஷம். "வாரும் வாரும் ஒருத்தரும் இல்லை எண்டு ஏங்கிக் கொண்டிருக்கிறன். இப்பிடி இரும்" என்று அழைக்க, வந்தவரோ - "இல்லை மச்சான் நான் ஆட்டுக் குக் குழைவெட்ட வந்தனான். எனக்கு நேரமில்லை" என்று மறுத்தார்.

நானெல்லோ உனக்குக் குழை தாறது. வேண்டாம் வேண்டாமெண்ணத் தரலாம். கொஞ்ச நேரம் இரும். என்று சொல்லி ஒருவாறு சாம்பசிவத்தார் அமர்ந்து கொண்டார். குழை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர் இருந்தார். இல்லையென்றால் மனைவியிடம் பேச்சு வாங்க வேண்டியதுதான்.

விளக்கு வைக்கும் நேரம் வந்தும் விளையாட்டு முடிகிற பாடாக இல்லை. சாம்பசிவத்தார் நெருக்கினார். நான் போகப்போறன். குழையைத் தாருங்கோ.

ஏரம்பர் எழுந்தார். வெளியில் தெரியாதவாறு அவரது கொடுப்பிற்குள் சிரிப்பு நெளிந்தது.



"எங்கையப்பா இந்தக் கத்தியைக் கொண்டா இந்தாளுக்குக் கொஞ்சம் குழை வெட்டிக் குடுப்பம்."

மனைவியைக் கூப்பிட்டுக் கத்தியை வாங்கிக்கொண்டு வளவின் பின்புறமாகப் போனார். குவிந்து போயிருந்த ஆமணக்குக் குழையை மூசி மூசி வெட்டினார்.


சாம்பசிவத்தார் திடுக்கிட்டுப் போய், "ஐயோ! என்கென் னத்துக்கு இந்தக் குழை. எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டாம்" என்று கத்தினார்.

ஏரம்பர் விடவில்லை. சிறிது நேரத்தின்பின்னர் "நானென்ன சொன்னனான்? வேண்டாம் வேண்டாமெண்ணத் தரு வன் எண்டுதானே சொன்னனான்."

சத்தம் கேட்டு ஓடிவந்த ஏரம்பரின் மனைவியும் சேர்ந்து மூவருமாகச் சிரித்துக்கொண்டனர்.

## சுந்தர் வீட்டில் ஒரு சுவையான நிகழ்ச்சி

1974 ஆம் ஆண்டு நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற காலம் அது -சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன் ஆகியோர் பெரிய இடர்களினூடே, இம் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்தனர். யாழ்ப் பாணக் குடாநாடு இந்த ஆராய்ச்சி மாநாட்டால் எழிற்கோலம் நிரம்பி வழிந்ததை இந்த இருவரும் கண்டு மகிழ்ந்தனர்.



சாலை இளந்திரையனுக்கு இங்கே பல இலக்கிய நண்பர்கள் இருந்தனர். அவர்களையெல்லாம் ஒரு நாள் சந்திக்க விருப்பம் கொண்டு, சிரித்திரன் சுந்தர் வீட்டில் சந்திக்க அழைப்பு விடுத்திருந்தார்.

இவர் ஆராய்ச்சி மாநாட்டில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பிப்பதற்கு முதல் நாள் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

மாநாட்டில் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண் டிருந்த சாலையர் தம்பதிகள், சுந்தர் வீட்டில் இலக்கிய நண்பர்களைச் சந்திக்கச் சென்றனர். சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும், இலக்கிய விமர்சனங்கள் நிறைந்த தாகவும் அமைந்திருந்தது. ஆனால், அங்கே இருந்த சிலர் குறிப்பாகச் சிறுகதைகள், கவிதைகள் படைப் போர் தாங்கள் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அழைக்கப் படவில்லை என்று குறை கூறினர். அப்படி அழைக்கப்படா விட்டாலும் கூட, அடுத்த நாள் சாலை இளந்திரையனின் கட்டுரை சமர்ப்பிக்கப்படும் பொழுது வீரசிங்க மண்ட பத்திலிருக்கும் ஒலிபெருக்கிமூலம் கேட்பதற்காக அங்கே வருகை தரவுள்ளதாகவும் கூறினர்.

யாழ்ப்பாணத்திலே ஆராய்ச்சி மாநாடு நடை பெறாது தடுக்க முனைந்தவர்களைப் பின்பற்றும் இந்தப் பிற்போக் காளர்களை நன்கறிந்த சாலை இளந்திரையன் கூறிய பதில் மிகவும் சுவையாக இருந்தது.

"நீங்கள் படைப்பாளிகள். சிறுகதை எழுதுகின்றீர கள், கவிதை எழுதுகின்றீர்கள், ஆனால் இங்கு நடப் பதோ ஆராய்ச்சி மாநாடு. தமிழ் மொழியை, பண்பாட்டை, இலக்கியத்தை, இலக்கணத்தை ஆய்வு செய்பவர்களுக் குத்தான் இந்த மாநாட்டுக்கு அழைப்பு, ஆராய்ச்சியா ளர்களுக்குரிய அழைப்பை உங்களுக்குத்தரச் சொல் கின்றீர்களே. யாழ்ப்பாண மக்கள் எவ்வளவு தூரம் இந்த மாநாட்டில் ஒன்றிப் போய் இத்தனை ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள். நீங்கள் ஏதாவது பங்களிப்புச் செய் தீர்களா?" என்று சாலை இளந்திரையன் கேட்க, அங்கி ருந்த பெருமளவினர் 'கொல்' என்று சிரித்தனர் சுந்தர் உட்பட. கேள்வி கேட்டவர்கள் முகத்தில் அசடு வழிந் தது. ஒருவர் கூறினார, 1974 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த நகைச்சுவை இதுவென்று. ★

- பரணி -




நாம் வாழுகின்ற இந்த நவீன உலகத்தில் வேண்டிய அளவிற்குப் புதிய அமைப்புகளிலான கட்டடங்களைப் பார்த்திருக்கின்றோம். ஆனால், இப்பொழுது இங்கு நாம் கூறப் போகின்ற கட்டடத்தைப் பற்றி என்றால் சிலவேளை நினைத்தும் பார்த்திருக்கமாட்டீர்கள்!

இந்தப் புகைப்படத்தில் நீங்கள் காண்கின்ற வட்டவடி வான கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது பிரேசிலின் கியூறிட் டிபா என்னும் நகரத்திலாகும். கடந்த நாட்களில் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்தப் புதுமையான கட்டடம் 11 தட்டுக்களைக் கொண்டதாகும். இது அதிக ஆடம்பரமான ஒழுங்கு முறையிலான வீடுகளைக் கொண்ட கட்டடமாகும். இதில் ஒரு வீடு, ஒரு தட்டுப் பூராவுமே பரவி இருக்கின்றது.

ஆனால் இந்தக் கட்டடத்தில் உள்ள நம்ப முடியாத விசேட தன்மை என்னவென்றால், இந்தப் 11 தட்டுக்களில் ஒவ்வொரு தட்டுமே ஒன்றையொன்று விட்டு சுதந்திரமாகச் சுற்றக்கூடிய விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. (என்ன உங்களுக்கு தலை சுற்றுகிறதா?) உண்மையாகவே இது கட்டடக் கலையின் புதுமையான அதி அற்புதமான சிருஷ்டி எனக் கருதப்படுகின்றது. அதேபோன்று அனைத்துத் தட்டுக்களுமே இந்த விதமாக ஒன்றிலிருந்து ஒன்று வேறு வேறாக சுயாதீனமாகச் சுற்றக் கூடிய உலகின் ஒரே கட்டடம், பிரேசிலில் உள்ள இந்தக் கட்டடம் தான் எனச் சொல்லப்படுகின்றது. அதன்படி இது உலகின் சாதனையைப் படைத்துள்ள ஒரு கட்டடமாகும்.


இந்தச் சுழலும் கட்டடம் கியூறிட்டிபா நகரத்தில் இகோவில் என்னும் பிரதேசத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தில் உள்ள வீடு ஒன்றினை வாங்குபவர்களுக்கு, சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தவாறு இகோவில் பிரதேசத்தின் காட்சிகளைச் சுற்றிச் சுழன்றவாறு கண்டு களிக்க முடியும்.

ஒரு தட்டில் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ள இந்த அதிசய ஆடம்பர மாளிகை 3000 சதுர அடி இடவசதிகளோடு கூடியது. ஒரு இல்லத்தின் விலை 3 லட்சம் அமெரிக்க டொலர்களாகும். இலங்கையின் பணத்தொகையில் 3 கோடி அளவிலாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதுமையான படைப்பில் உள்ள மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால் அங்குள்ள மின்விளக்கின் ஒழுங்கு முறைகளைப் போன்று வீடுகளின் சுழற்சியையும் தொலைவில்

# வேறு வேறாகச் சுழலக்கூடிய கட்டடத் தொகுதி இது!

இருந்தே றிமோட் கருவி மூலம் நிர்வகிக்க முடியும். அதே போன்று அனைத்து ஒழுங்கு முறைகளையும் மனிதர்களின்



குரலின் ஒலியின் மூலம் செயற்படுத்தக் கூடியதாகவும் உள்ளதால், அவை அனைத்தையும் வீட்டில் வசிப்பவர்களுக்குச் செய்யக்கூடியதாக இருக்கிறதாம். இந்தத் தட்டுக்கள் அனைத்தும் இடப்புறமாகவோ, வலப்புறமாகவோ சுழலக்கூடியதாக உள்ளது. அதேபோன்று சுற்றும் வேகத்தையும் வேண்டிய அளவிற்குக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். ஆகக் குறைந்த வேகத்தில் சுற்றும் போது ஒருதடவை சுற்றிவருவதற்கு தட்டு ஒன்றுக்கு ஒரு மணி நேரம் கழிவதாகச் சொல்லப்படுகின்றது.

*–இணையத்தளத்திலிருந்து வல்வையூரான்.*

## நான் அவருடைய மனைவி

அந்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு அன்று நிறைய வேலை இருந்தது. செயலாளரைக் கூப்பிட்டு. வெளியிலிருந்து யாராவது வந்து பார்த்துப் பேச வேண்டுமென்றால். இன்று நேரமில்லை என்று மறுப்புச் சொல்லி விடுங்கள். மிகவும் அவசரமாகச் சந்திக்க வேண்டுமென்று சொன்னால் "எல்லோரும் இப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள்" என்று மறுத்துக் கூறிவிடுங்கள். என்று கட்டாயப்படுத்திக் கூறினார்.

அன்று மாலை. அந்த நிறுவன உரிமையாளரின் மனைவி வந்து. அவரை உடனடியாகச் சந்திக்கவேண்டும் என்று அவசரப்படுத்தினார். செயலாளரோ கடுமையாக மறுத்துச் சந்திக்க முடியாதெனச் சொன்னார். வந்தவரும் விடவில்லை. "நான் அவருடைய மனைவி. கட்டாயம் சந்திக்க வேண்டும்" என்றார்.

செயலாளரும் சளைக்காமல் "எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள்" என்று கூறினார் மிக அமைதியான குரலில்.



### இந்தியப்படை ஆக்கிரமிப்புக்கால நிகழ்வுப் பதிவுகள்

கை.சரவணன்

# I.P.K.F அப்பாவி மக்களைக் கொல்லும் படை!

இந்தியப்படைகள் பற்றிய படிமம், 10.10.1987ற்குப் பின்னர் மக்கள் மத்தியில் பெரியதொரு வினாக்குறியாகி, அதுவும் அழிந்து படைகள் பற்றிய உண்மை முகம் தெரியத் தொடங்கிய அக்காலகட்டத்தை மீள நினைப்பதில் கடினமாயிருக்காது என நினைக்கிறேன்.

காந்திதேசம்,அகிம்சையின் பிறப்பிடம், மகான்கள் உதித்த அற்புதமான புனித பூமி , தமிழருக்கு உதவக் கூடிய சகோதர நாடு என்ற நம்பிக்கை எல்லோரிடத்தும் நிலவியது. ஆனாலும், தியாகி திலீபனின் தியாகத்தையடுத்ததான காலமும், கடலில் கடல்புறா வழிமறிக்கப்பட்டதன் பின்னர் பன்னிரண்டு வேங்கைகளின் முடிவும் மக்கள் மத்தியில் திகைப்பை ஏற்படுத்தியது. மக்கள் விழிப்படைந்தனர்.

அதிலும் விழிப்பு நிலை, அநேகமாக போராட்டத்துடன் நெருங்கி நின்ற பாமரமக்கள் (அதிகம் படியாதோர், அனுபவசாலிகள்) மத்தியில் பெரிதும் ஏற்பட்டது. மாறாக அநேகம் படித்தவர்கள்/பெரிய மனிதர்கள் தொடர்ந்தும் மாயைக்குள் மயங்கியே கிடந்தனர். (இருந்தனர் என்பதைவிட கிடந்தனர் என்பதே கூடுதல் பொருத்தமுடையது)

10.10.87ன் பின்னர் பெரும் அழிவுகளிலிருந்து மக்கள் திகைப்பூட்டும் பல விடயங்களோடு வாழத்தொடங்கிய போது கூட, படித்த மனிதர் பலர் ஏதுமறியாதவர்கள் போல காந்திதேசம் பற்றியும் அகிம்சை பற்றியும் கனவுகண்டு கொண்டிருந்தனர் என்பது மறுக்க முடியாது.

எறிகணையின் சிதறல்களும் துப்பாக்கி ரவைகளும் சுவைத்த சுவர்கள் கூட காந்தி, அறிஞர் அண்ணா, இந்திரா காந்தி, நேதாஜி, சுபாஸ் சந்திரபோஸ், ராஜாஜி போன்றவர்களுடைய புகைப்படங்களைத் தாங்கி நின்றன. வெளிவாயில் கதவுகள் ''சுவஸ்திக'' தரித்திருந்தன. (இக்காலப் பகுதியில் ஒரு நன்மையான காரியம் பெண்கள் கணுக்கால் வரை பாவாடை, கழுத்து முட்டவும், கையுள்ளதுமான சட்டை என பண்பாடுபற்றி யோசித்தமை. கட்டைப் பாவாடை பண்பட்ட தேசத்துப் படைகளுக்குப் பிடிக்காதே(?) )

படங்கள், சுவஸ்திக போன்றவை, தம்மை இந்திய (இந்து) சார்பாளராயும் பற்றாளராயும் இனங்காட்டித் தப்பித்துக் கொள்ளும் மனப்பாங்குடைய படித்த (பெரிய) மனிதர் வீடுகளில் தவறாது இடம் பெற்றன. இந்தியப் படையினரின் அத்தனை செயற்பாடுகளுக்கும் காரண காரியம் கற்பித்தலும், படையினருடன் புலிகள் மோதுவது பிழை என்று கூடிக்கதைப்பதும் அவர்கள் வழமை. (இதில் விதிவிலக்கான படித்த பெரிய மனிதரும் உள்ளனர். அவர்கள் வீடுகளில் அனேகமாக உணவு மேலதிகமாகச் சமைக்கப்படுவதும் அது பின்புறத்தால் எங்கோ செல்வதும் பலரும் அறியாதது)

87இன் இறுதிப்பகுதியின் பின் ஊருக்குள் காவல்(?) உலாக்களைப் படையினர் அதிகரித்து இருந்தகாலம். வேலிகள், மதில்கள் எல்லாம் அவர்களுக்குத் தலை போகின்ற அபாயங்களைத் தந்தன. எனவே மதில்களில் துவாரங்களிட்டும் (சில இடங்களில் மதில்கள் இடிக்கப்பட்டதும் உண்டு)வேலிகளை முழங்கால் மட்டத்திற்குக் கீழ் மறைப்பற்று வெளியாக்க வேண்டுமெனவும் உரிமையாளர்கள் பணிக்கப்பட்டனர். இதனைவிபற்

## ஏரி நீர் எப்படி இருக்கிறது?

ஒருநாள் அரசர் இராயர் தனது அமைச்சர்களோடு ஏரிக்கரை வழியாகச் சென்று கொண்டிருந்தார். அதன் அழகை ரசித்துக் கொண்டே சென்று கொண்டிருந்த அவர். அமைச்சர்களைப் பார்த்து ''ஏரி நீர் எப்படி இருக்கிறது?'' என்று சாவகாசமாகக் கேட்டார்.

ஒரு அமைச்சர் ''முத்துப்போல் இருக்கிறது'' என்றார்.

இன்னொருவர் ''பால் போல இருக்கிறது'' என்றார். ஒன்றுமே பேசாதிருந்த அப்பாஜியைப் பார்த்து என்ன அப்பாஜி மௌனமாக இருக்கிறீர்'' என்று இராயர் கேட்க, ''ஏரி நீர் கரையால் தான் இருக்கிறது. கரை இல்லையென்றால் எப்படி இருக்கும்'' என்று எளிமையாகச் சொன்னார் அப்பாஜி. அவருடைய புத்திக் கூர்மையை மனதுள் வியந்தார் இராயர்.



பொங்கல் முதலாம் தரம்...
பொங்கல் இரண்டாம் தரம்...
பொங்கல் மூன்றாம் தரம்...
அடிப்பாவி ஏன் இப்படி தொண்டை கிளியக் கத்தி ஊரக் கூப்பிடுற.
இல்லைங்க. சமையல் குறிப்பில பொங்கல் இறக்கமுன் அடுப்பில் வைத்து ஏலம் போடச்சொல்லி இருந்தது.

றைக் காணிகள், ஆட்களற்ற வீடுகள் என்பனவற்றின் உரிமையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றைத் துப்புரவாக்குமாறும் கண்டிக்கப்பட்டனர்.

இந்நடவடிக்கை, வேலியை நம்பிய யாழ்ப்பாணிகளின் மனதில் எரிச்சலை மூட்டினாலும் புறுபுறுத்தபடி அவர்கள் கூறியபடியே செய்யவேண்டிய நிலை. எரிச்சலோடும் திட்டுதல்களோடும் செய்து கொண்டனர்.

இப்படியான ஒரு உத்தரவு காந்தி, நேரு படங்களுக்குக் கீழே (ஓசி) ஆங்கிலப்பத்திரிகை படிக்கும் ஓய்வூதியர் ஒருவருக்கும்-''ஹேய்... வேலி கிளீனிங்... முழங்கால் கீழே.... அண்டர்ஸ் ரான்ட் '' என (அன்பாக(?) ) வழங்கப்பட்டது. அடை மழை பொழியும் காலமது.

குறித்த ஓய்வூதியர் படித்த,நாலுமறிந்த பெரியவர் முற்கூறிய மாயைகளின் பால் முழுமையாக கரிசனையுள்ளவர். இந்தியப் படை உண்மையான அமைதி காக்கும் படை என்பதிலும் ''சோலிக்குப் போகாவிடின் சோலிக்கு வரார்'' என்பதிலும் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர். படையினரைக் கேலி செய்வோர் மீதும் ஆத்திரப்படுவோர் மீதும் கோபமாக விவாதிப்பவர். "புலிகள் பெருத்த தவறிழைத்துவிட்டார்கள்'' என்று கூறுபவர். படையினருடன் (கொஞ்சமாவது படித்த அரை குறை ஆங்கில அதிகாரிகளுடன்) ஆங்கிலத்தில் உரையாடுவதிலும் நட்பைப் பேணுவதிலும் குறியாக இருந்தவர்.

அவருக்கான உத்தரவுப்படி வேலியை வெட்டத் தயாராயிருந்தாராயினும் கூலிக்கு வேலை செய்யும் ஆட்கள் வரவில்லை. தொடர்மழை வெள்ளம். வீட்டால் வெளியே செல்ல அஞ்சும் குளிர் காற்றுடன் மழை.மழையிலும் ''ஹேய்... வேலி நோ கட்டிங்.. நோ கிளீனிங்... கம்...கம்.கட்'' மழைக்கவசத்துடன் இருந்தபடி கோபமாகக் கட்டளையிட்டுக் கொண்டு ஜவான்கள் வந்தனர்.

நம்மவர் (படித்த குறித்த நபர்) பெரிய குடை, குளிர்காப்பு ஆடை (சுவெட்டர்) சகிதம் வெளிவந்து ஆங்கிலத்தில் கூலியாள் வராமை, மழை போன்ற காரணங்களைப் படபடவெனக் கூறியதுடன் மழை ஓய்ந்தபின் வெட்டுவதாகக் கூறிப்பார்த்தார். மீள மீள அவர்களும் இவரும் ஒரே கதை. மழை வானிடிந்து வீழ்வதாய் பொழிந்து கொண்டிருந்தது.

''கத்தி...கத்தி நைவ்... இருக்கா கொண்டா'' படையினன் ஒருவன் கேட்க, கத்தியுடன் வந்தவரை வேலியோரம் வருமாறு சைகையால் அழைத்துச் சென்றனர். வெட்டுமாற பணித்தபோது பரிதாபமாக தனது முதுமையைக் காரணங்காட்டி இயலாமையைத் தெரிவித்தார். கெஞ்சிப் பார்த்தார். பயனில்லை. உத்தரவு மீளப் பிறந்தது.

பரிதாபமாக ஒருகையில் குடை மறுகையில் கத்தி சகிதம் வேலி வெட்டத்தொடங்கவும் அடிவிழவும் சரியாக இருந்தது. குடை முறிந்து பறந்தது. அடி சரமாரியாய் முதுகைப் பதம்பார்த்தது. (அடி S.L.R துப்பாக்கியால் விழுந்தது என்பதை அவர் அறியக் கூடியதாக இருந்தது.) பின் என்ன? நடுங்கி நனைந்தபடி தனியாக வேலி வெட்டி துப்புரவாக்கும் வரை காவல் நின்றபின் படையினர் சென்று விட்டனர். அடுத்தடுத்த வீடுகளிலும் இது முறைப்படி நடந்தேறியது. (வழக்கமாக படையினரைக் கண்டால் குரைத்து அலறும் நாய்களுக்குத் தெரியாமலேயே இவை நிகழ்ந்தேறின. மழைக்குளிரில் நாய்கள் முடங்கிப்படுத்தமையே காரணம்)

அடுத்தநாளே அவர் படுக்கையில் வீழ்ந்தார். காய்ச்சல், முதுகுவலி எனப் புலம்பியபடி கிடந்தவரைப் பார்க்கப்போன அனேகருக்கும் புலம்பியது இதுதான்–

"I.P.K.F. எண்டா Innocent People Killing Forces எண்டது தான் பாருங்கோ மீனிங். நான் ஒரு மடையன் நல்லா ஏமாந்து போனன் பாருங்கோ."

## கூச்சமாக இருக்கிறதா?

## வெட்கத்தை விடுங்கள்


பொது நிகழ்வுகளில், பலர் கூடியிருக்கும் போது? சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் சிலருக்கு உணவு போதாமல் இருக்கலாம். ஆனால் வாயால் கேட்க வெட்கமாக இருக்கும். அதற்கு என்ன செய்யலாம்? நிறையப்பேர் சுற்றிவர இருக்கும் போது, சாப்பாடு போதாதென்று சொல்வது எல்லோராலும் முடியாத ஒன்று தான். அதற்காகத் தான் திபெத் நாட்டினர் ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். என்ன தெரியுமா?

நீங்கள் கூடுதலாக ஒன்றுமே செய்யத் தேவையில்லை. சாப்பிட்ட வயிற்றை இடது கையால் ஒரு முறை மெல்லத் தடவினால் போதும். உங்கள் தட்டில்



சாப்பாடு வந்து குவியும். நீங்களும் ஒருமுறை தடவிப் பாருங்களேன். அதற்கும் கூச்சமாக இருக்கிறதா?

# புறோக்கரும் சாத்திரியாரும்.....




"அண்ண புறோக்கர்... வாரும் காணும்... கனநாளாய்க் காணம்...ம்... சுனாமியில அடிபட்டீரோ எண்டல்லே நினைச்சன்..''

"அட...ட...ட... சாத்திரியாரே... ஓகோ என்னில வலு பிடிப்புத்தான் போங்கோ. இது எத்தினை அடிவாங்கின தேகம்.. சிலோனாமி... இந்தியனாமி... திரும்பவும் சிலோனாமி... தாங்கின தேகமல்லே''

"போங்காணும் புறோக்கர்... நான் சுனாமியைச் சொல்லுறன்...''

"இஞ்சாருங்கோ அடிமடியில கைவைக்காம விசயத்தைச் சொல்லுங்கோ சாத்திரியார்..''

"இப்ப பாரும் காணும் புறோக்கர்... எங்கட ஆக்களுக்கு அது.... 'மி' தோசம்''.

"என்ன? 'மி' தோசமோ... சனிதோசம், நாகதோசம். எண்டது சரி "மி'' தோசம் எண்டு குழப்பிறியள்''

"இஞ்சாரும் நீர் சொன்னீரே ஆமியள் அடிஅடியெண்டு அடிச்சதெண்டு. இப்ப சுனாமி அடிச்சுது. எல்லாம் 'மி' தான் கண்டீரோ?''

"ஓமோம்.... ஓமோம்... சரியான தோசம், கடுமையாகத்தான் போட்டு ஆட்டுது பாருங்கோ சாத்திரியார்''

"அதுசரி காணும் புறோக்கர்- கடல்அலை வந்தது தான் வந்தது. அது ஒரு பக்கம் அதுக்குப் பிறகுதானே காணும் அதைவிட அவலம்...''

"என்ன... என்ன சாத்திரியார் அதுக்குப் பிறகெண்டு புதுச்சாத்திரம் பாக்கிறியள்...?

"அட என்ன காணும்.. ஊர்முழுக்க ஓடித்திரியிறீர்.. அறியேல்லையோ? உங்க உந்த உலகத்துக் கள்ளரெல்லாம் வந்து நிக்கிறாங்கள்... ம்....ம்... கேட்டால் மனிதாபிமானம்... மனிதாபிமானம்...''

"அட...அட.. ஒரு இடத்தால அரக்காம அப்படியென்ன சொல்லுறியள்.. எண்டல்லே யோசிச்சன்... பாருங்கோ உதுபாருங்கோ... நீங்கள் அமெரிக்கா, இந்தியா படைகளை அனுப்பினதைச் சொல்லுறியள் போலக்கிடக்கு''

"புறோக்கர் நீர் பேய்க்காய் காணும். படக்கெண்டு பிடிக்கிறீர்... வியட்நாமை அழிச்சவை... அதுவும் குளம் குட்டையில் நஞ்சு கலந்து... பச்சை மரங்கொடியளை இரசாயனமடிச்சு அழிச்சு... எரிகுண்டடிச்சு... ஆ.. கொஞ்சநஞ்சமே காணும்....''

''சாத்திரியார்.... அங்க மட்டுமே ஈராக்கில... ஆப்கானிஸ்தானில எண்டு அதுமட்டுமில்லப் பாருங்கோ உலகத்தின்ர சனநாயக காவலெண்டல்லே பேய்க்காட்டிக் காட்டி உலகத்தை அழிக்கிறது அமெரிக்கா...''

"எல்லாம் பாரும்.... நோக்கத்தோட... இந்தியா நல்லபிள்ளைப் பேரெடுக்க... அமெரிக்கா சும்மா இருக்கவோ...''

"அதுதானே சாத்திரியார் இந்தியாவில சுனாமியடிச்ச கடலோரங்கள் நாறுது... ரீவியில பாத்தன்... உவை இஞ்சவந்து கிணறு இறைக்கினம்... என்ன இரக்க குணம் பாத்தியளோ?''

"இவை மட்டுமில்ல; முழுமுதலாளித்துவ நாடுகளுமல்லே வந்து புள்ளிவிபரமெடுக்கினம்..''

"புள்ளிவிபரம் புள்ளிவிபரமெண்டு எடுத்துச் சாத்திரியார்... மிச்சம் மீதி இருக்கிறத எப்பிடிச் சுரண்டலாமெண்டு கணக்குப்பாப்பினம் பாருங்கோ''

"ஓமோம்...புறோக்கர். அதைவிட உதவி உதவி... ஆபத்துக்கு உதவுறம் எண்டு தங்கடநாட்டுக் கழிவுகள் குப்பையளைக் கொட்டுவாங்கள் பாரும்''

''உது பாருங்கோ வெளிநாட்டுக்காரன் தான் பேக்காட்டுறானெண்டு குறைசொல்லேலாது பாருங்கோ.. எங்கட சில தொலைக்காட்சியள் படுத்திறபாடு பாருங்கோவன் சாத்திரியார்''

"ஓமோம்... ஆழியின் அலை அது, இது எண்டு தங்கட விளம்பரம்... அதோட நடந்த அவலத்தை மறக்கப்பண்ணி இயல்புக்குத் திரும்ப எண்டு ஒரு பகுதி முயற்சி செய்யுது. இவை மற்றப் பக்கத்தால அழுகை... குழறல்... அவலம் அது இது எண்டு விளாசுகினம் காணும்''

"ஓம் சாத்திரியார்..... பெரிய அழிவு, அவலம் எண்டதை உலகம் நேரயே பாத்தபிறகு உது.... யோசிககத் தானே வேணும்... அதோட போடுற பாட்டொண்டு மூண்டு பாசையிலும்?''

''ஓ...ஓ...ஐக்கிய இலங்கையை இறுக்கமாகச் சொல்லுகினம்... அதோட அவயின்ர அசைவுகள், தோற்றங்கள் பற்றி கொழும்புப் பேப்பரில ஆரோ எழுதின பிறகும் போடுறாங்கள் தானே''

"எம்.பி. மாரிட்டையும் அரசியல்வாதியிட்டையும் உருட்டு யுருட்டி கேள்வி கேக்கிறளவுக்கு ஐக்கிய இலங்கையைக் கட்டுற பாட்டுக்கு அர்த்தம் தெரியேல்லப் போல சாத்திரியார்.

"தெரியாத மாதிரிக் காணும்... புறோக்கர்... உதுதான் பாரும் அரசியல்... அதுசரி வெளிநாடுகளில்... அந்த இந்த நிறுவனங்கள் எல்லாம் கொட்டுறம் எண்டுறாங்களெல்லோ? எங்கயாம் கொட்டுகினம்?''

"அதுதானே.. சாத்திரியார் அமைச்சர்மாரும் அவையின்ர ஆக்களும் சனத்தின்ர பேரில நிவாரண பாரமெடுக்கவல்லோ எல்லாம் தங்கட கைக்குள்ளால போகவேணுமெண்டு நிக்கினம்....''

"அதுதானே காணும் ....... அங்க செய்ததோட மற்ற இடங்களில நடக்கிறதை ஒப்பிட்டா பெருத்த சங்கடமல்லோ''

"ஓமோம்... காலி றெயின் பிரச்சினையையும்... முல்லைத்தீவு மீட்பையும் ஒப்பிட்டாலே தெரியும்தானே... றெயின் பிரச்சினை கடுமையாயல்லோ புகையுது... சாத்திரியார்.. றெயினை மீட்க அரசபடைபோகாத காரணம் தெரியுமல்லோ? மகிந்தவின்ர சொல்லுக்கு மதிப்பில்லை. அம்மணி சொன்னாத்தான் நடக்குமாம் கண்டியளோ?''

"புறோக்கர்.... உதுமாதிரி நிவாரணம்... மீளமைப்பு எண்டு புடுங்குப்பட வாரதும்சரி... எனி இப்பவே கப்பல் வாங்குவம்... பிளேன் வாங்குவம் எண்டு ஓடித்திரியிறவை.. உதுகளும் சரிப்பட்டா சொல்லிவேலையில்லை.

"ஓம் சாத்திரியார்... இதிலையும் வெட்டி.. சுனாமிக் கணக்கிலயும் வெட்டி அதமாத்தி ஆமிக் கணக்காக்கி அதிலயும் வெட்டி... கொண்டாட்டமாத்தான் இருக்கும்''

"கிள்ளித் தெளிக்கிறதில சிங்களவருக்கும் போகும். தமிழன்ரபாடு புறோக்கர் வழக்கம்மாதிரி கொட்டாவிதான் காணும்...''

"கதையளும் அறிக்கையளும் என்னவெண்டாப் பாருங்கோ நாட்டைக்கட்டி எழுப்புவம்... கட்டி எழுப்புவம் எண்டல்லோ போகுது...''

"புறோக்கர்... எனக்கொரு பயம் காணும், சிரியாதயும் கேட்டு.... கட்டி எழுப்பிக் கட்டியெழுப்பி கடசியில பிளேனுகள் மோதினாலும் மோதும் காணும் உயரப் போய்...''

"ஓமோம்... மலை நாட்ட விட உயரும்.. ஆனா சுனாமி வந்தாலும் முட்டாதுதானே... சரிவரட்டே போட்டு''

"ஓமோம் புறோக்கர்... நீர் நடையக்கட்டும் ... இதில இருந்து கதைச்சு ஆகப்போறது என்ன காணும்...''

- கொண்டோடியார்.


சிரிபுக்கள்
"என்னப்பா ஒரே கவலையா இருக்கிறாய்?"
"என்னுடைய காதலிக்கு ஆசையாய் அவளை வர்ணித்து ஒரு கடிதம் போட முடியவில்லை!"
"ஏன் அவளுக்கு எழுதப்படிக்கத் தெரியாதோ?"
"நீ... ஒன்று... அவளுக்கு எல்லாம் தெரியும்... ஆனால்... அவளின்ரை அப்பா தான் அவள் வீடு இருக்கிற பகுதிக்கு தபால்காரர்...!"
"ஓ...! பாவமமே...!"
-கைடி
" இவ்வளவு நேரமும் குடும்பக்கட்டுப்பாடு பற்றிப் பேசியவர் திடீரென்று மயக்கம் போட்டு விழுந்து விட்டாரே...!?"
"அவரின் மனைவிக்கு ஐந்தாவது பிரசவத்தில் ஒரே சூலில் மூன்று பெண் குழந்தைகள் பிறந்திருப்பததாக தகவல் வந்திருக்காம்...!"
"அட பாவமே....!"
-கைடி
"அந்தப் பிச்சைக்காரன் எப்பபார்த்தாலும் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறானே..... என்னதான் எழுதுகிறானாம்...?
'குறுகிய காலத்தில் கோடீஸ்வரனாவது எப்படி' என்று ஓர் புத்தகம் எழுதுகிறானாம்!
-தூரன்
"பண்டார வன்னியன் வேடமிட்டுக் கொண்டு மேடையில் கோழை போல் ஏன் பயந்து நடித்தீர்கள்?"
"மேடையில் முன் வரிசையில் நான் கடன் வாங்கிய நபர் முறைத்துப் பார்த்துக் கொண்டல்லவா இருந்தார்!"
"ஐயோ பாவமே!"
-கைடி
ஒரு பிச்சைக்காரன்: 'என்ன அந்த கடை முதலாளி உன்னைக் கண்டா ஆந்தை முழி முழிக்கிறார்?
மறு பிச்சைக்காரன்: வாங்கின கடனுக்கு மூணு மாசமா வட்டி தரேல்லை. அதுதான் ... இந்த முழி முழிக்கிறார்....
-தூரன்
நீதிபதி: இவ்வளவு கட்டுக்காவல் இருந்து எவ்வளவு கெட்டித்தனமாக இந்தப் பெரிய வங்கியில் கொள்ளையடிக்கிறாய்?
திருடன்: பாராட்டுக்கு நன்றி... எனக்கு புகழ்ச்சி பிடிக்காதுங்கோ... நீங்கள் புகழ்வதைக் கேட்க எனக்கு தேகம் புல்லரிக்கிறது நீதிபதி அவர்களே!
-கைடி

# அந்தக்காலத்து சந்தோஷமும் நிம்மதியும்....



## விண்ணாணம் விசாலாட்சி

பொம்பிளையளெண்டாலும் சரி ஆம்பிளையளெண்டாலும் சரி எல்லாம் ஒண்டுதான். இந்த நாளையில் பெண்டுகள் எதையெடுததாலும் சம உரிமை சம உரிமையெண்டு கேக்கினம். ஆனா அந்த நாளையில நாங்களனுபவிச்ச சுதந்திரத்தில நாலிலொரு பங்கு இப்பத்தயப் பெண்டுகளுக்கு இல்லை. பின்னக் காலமை எழும்பி கண்ட விட்டுவிட்டு ரெண்டு கலயம் பால்கறந்து, காச்சி, கள்ளிச்சொடடுப் போல தேத்தண்ணியாத்திக்குடுத்து, என்ர அவரை வயலுக்கு அனுப்பிப் போட்டு, பச்சையரிசியில அஞ்சாறு பாசிப பயறைப் போட்டு ஒரு கஞ்சியோ, புக்கையோ காச்சி பிள்ளையளுக்குக் குடுத்து வயலுக்கும் கொண்டோடிப் போய் குடுங்கோ எண்டு மாமாவை அனுப்பிப் போட்டு, கோழியளுக்குத் தீனைப் போட்டுத் திறந்து விட்டிட்டுத் திண்ணைக்குந்தில இருக்க, வள்ளிப் பிள்ளை, பு,ரணம், செல்லம்மாக்கா, தையிலம்மாக்கா எண்டு அயலுப் பொண்டுகளும் வருவினம். கூடி நாலுபத்துக் கதையளக் கதைப்பம். சீலப்பொட்டணிகாறன் வந்தாக் கூப்பிட்டு பு,ராயம் பாக்கறவை பாக்க, எடுக்கிறவை துணி எடுப்பம். மணிப்பெட்டிக் காறன் வந்தா அப்பிடி வாசச்சவுக்காரம், புசர் மாப்பேணி, பு,ச்சியுருண்டை, பேன் சீப்பு, அரிதட்டெண்டு வாங்குவம்.


பத்து மணிபோல எண்டா எல்லாரும் அவரவர் வீட்டபோய் சமைலடுக்கப் பாப்பம். அரிசியக் கழுவி உலையிலபோட்டு, மரக்கறி வெட்ட மீன் காறன் வந்திடுவான். அதையும் வாங்கி, ராவுக்கும் சேத்துக் கறிவச்சுட்டு, மத்தியானம் எல்லாரும் சாப்பிட்டுப் போட்டு மறுபடி எங்கட மாதர் சந்திப்புத் துவங்கும்.

ரெண்டு ரூவாக்காசும் ஒரு கொத்து அரிசியும் ஒரு சுண்டு சீனியும் போட்டு ஒரு சீட்டுக் கட்டுவம். செல்லம்மாக்காதான் தாச்சி. கிழமைக்கொருக்கா கட்டினா, பன்ரெண்டு கொத்து அரிசியும், இருவத்தினாலு ரூபாக்காசும், பன்ரெண்டு சுண்டு சீனியும் வரும். தாயம் விளையாடுவம். தையல் தைப்பம். நாலு அஞ்சு மணிக்கு வீடு வாசல் கூட்டுவம். மாடு கண்டு கட்டுவம். இரவும் கொஞ்ச நேரம் வீட்டில சந்தோஷமாக் கதைச்சுக்கொண்டிருந்துபோட்டுப் படுப்பம்.

மனிசன் மாடு பாடுபட்டமாரி வயல்ல உழைச்சுப் போட்டு வரும். அந்தாளுக்கு ஒரு தண்ணிவென்னி வைச்சுக் குடுத்து நல்ல சாப்பாடுங்குடுத்து, ஒரு நோய் நொடியில்லாம வச்சிருந்தாத் தானே குடும்பத்துக்கு வருமானம் வரும். அந்தாள் வருத்தம் துன்பமெண்டு படுத்தா மண்ணையே தின்னுறது. ஆம்பிளைக்கு நல்ல சாப்பாடு, பொம்பிளைக்கு மிச்சச் சாப்பாடு எண்டா ஒடுக்கு முறையாம். அவர் நல்லா உழைச்சார். எல்லாரும் வயுத்துக்கு நல்லாச் சாப்பிட்டம். பாடுபடுறவன் நேரத்தோட நித்திரை கொள்ள நாங்கள் பிந்திப் படுக்கைக்குப்போறது ஒடுக்குமுறையாம். அவரும் வயற் காவலுக்குப் போய் ராக்கண் முழிக்க, நாங்கள் மதவிமதவி நித்திரை கொள்ளுறனாங்கள் தானே. அந்தாள் இவளகாலமா எனக்கென்ன குறை வச்சிது. உடுப்புத்துணிமணி எடுத்துத் தரயில்லையோ? சோறு, தண்ணி தரயில்லையோ? ஒரு உப்புக்கட்டிக்குக் கூட அடுத்த வீட்டுக்கு விட்டதில்லை. அது பிழையே?

இப்பத்தையிப் பொண்டுகளுக்கு ஒரு நிமிசம் இருந்து கதைக்க நேரமிருக்கோ. ஆணும் பெண்ணும் சமமாம். ஆம்பிளைமாரி இவை உழைக்க வெளிக்கிட்டதில என்ன கண்டவை. ஆம்பிளையளாரும்... இல்லத் தெரியாமத்தான் கேக்கிறன்... ஆம்பிளையளாரும் பொம்பிளயள்மாரி வீட்டு வேலையளைச் செய்ய வருகினமோ....? பிள்ளையளோட கூட்டத்துக்கு வாற பொண்டுகளக் கண்டிருப்பியள். குழந்தைப் பிள்ளையளோட கூட்டங்களுக்கு வாற ஆம்பிளையைளக் கண்டனீங்களே. வீட்டு வாசலுக்கு வாற யாவாரி மாரெட்டச் சாமான் வாங்கின காலத்தில, நாங்கள் சந்தோஷமா எங்கட பிள்ளையளோட, அதுகளப் பக்கத்தில இருந்து வளக்கயில்லயே. இப்ப பிள்ளையளோட கதைக்கவும் தாய்மாருக்கு நேரமில்லை. பிள்ளையளுக்கும் கனபேருக்குள்ளது அம்மாவே? அது சும்மா. பால் குடுக்க நியு,சிலாந்து மாடு. படுக்கைபோட ஆயா, தாலாட்ட றேடியோ, நிலத்திலயிருந்து அரையடி உயர்த்தின குதிக்கால் செருப்பு, அரையடி கிழிச்ச பாவாடை, தலையிலயிருந்து அரையடி வளத்த கூந்தல், இடையிலிருந்து அரையடி இறககின சீலைக் கட்டு. தோளிலையிருந்து அரையடி இறக்கின கழுத்து வெட்டுச்சட்டை எண்டு எல்லாத்திலயும் அரையடி இறங்கினதோடை சுதந்திரமாத் திரியிறம் எண்டு நினைக்குதுகள். பின்ன நாங்கள் அனுபவிச்ச சந்தோஷத்தில நாலிலொரு பங்கு இப்ப இல்லை.

எங்கடை ஆம்பிளையளப் போல எங்களுக்கும் எல்லாஞ் செய்யத்தெரியும, மலையப் புடுங்குவம், கடலைக் கடைவம். வெட்டிப் புடுங்குவம் எண்டு வெளிக்கிட்டியள். கணட ம'ச்சமென்ன? பிளளை வளப்பிலும் அதுகளின்ர அடிப்படை உரிமையும் பறிபட்டுப் போச்சு. வயது போனதுகள், அன்பு காட்ட ஆளில்லாம முதியோர் இல்லங்களுக்குப் போகப்போறம். காவோலைவிழக் குருத்தோல சிரிக்குதுகள்.



அவள் : பின்லேடனுக்கு 'சோடா' குடிப்பது பிடிக்காது?

இவள்: ஏனாம்?

அவள்: சோடாவைத் திறந்ததும் 'புஷ்' ஸென்று சத்தம் போடுகிறதே....!


-சங்கீதா


சிரித்திரன்

உங்கள்
சிரித்திரனின் மூலம் நீங்களும்
மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும்
வைக்க....
சிரிகதை - நகைச்சுவைக் கட்டுரை
சிறுகதை - கவிதை - மகுடி பதிலுக்கான
கேள்விகள்
துணுக்குகள் மற்றும் பல்சுவை
அம்சங்களை எழுதலாம் தானே....
எழுதுங்கள்.... பிரசுரிக்கின்றோம்...
சிரித்திரன் குறித்த உங்கள்
மனப்பதிவுகளையும் தவறாது
எழுதுங்கள்.

ஆசிரியர்
சிரித்திரன்,
தபாற்பெட்டி எண் 149
யாழ்ப்பாணம்,
சிறிலங்கா.

சிரிகதை





# வந்ததே வில்லங்கம்

**பொன்.சுகந்தன்**

**போ**கின்ற இடமெல்லாம் வில்லங்கம் வருவதை நினைத்து ஜம்புலிங்கம் மனத்தால் வருந்தி ஒரு மூலையில் போய் அமர்ந்து கொண்டபோதுதான்.... தூரத்தே புறோக்கர் தள்ளாடிக்கொண்டு வருவது தெரிந்தது. கண்டதும் கலக்கம்கொண்ட ஜம்புலிங்கம் "பாட்டியம்மா... இங்கே வா"... புறோக்கர் வாறார்...." என்றதும் பதறிக் கொண்டு ஓடிவந்த பாட்டியம்மா.... புறோக்கரைக் கண்டதும் திகைத்துப் போய் சிலையாக நின்றாள். புறோக்கருக்கு இருந்த இரண்டு பற்களும் உடைந்த நிலையில் கிழிந்த உடையுடன் பரிதாபகமாகக் காட்சியளித்தார் புறோக்கர். "கிழவி... பார் உன்ரை பேரன் ஜம்புலிங்கம் பேசின உண்மையாலை என்ரை பல்லுப் போச்சு... உன்ரை பேரனுக்கு எத்தனை ஜென்மம் எடுத்தாலும் கல்யாணம் பண்ணமாட்டாய். மூளைகெட்ட மூஞ்சூறு... இதாலை முப்பத்திரண்டு பல்லும் இல்லாமல் இருக்கிறேன். இந்தக் காலப் பொடி பெட்டையெல்லாம்... இசகு பிசகாய் பொய் சொல்லிக் கல்யாணம் பண்ணுதுகள் இது கோவேறு கழுதை என்னைப் பொய் சொல்லச் சொன்னதாய் மாட்டிவிட்டு இப்ப பல்லும் போச்சு.... இப்ப சந்தோஷந்தானே" எனக் கோபத்தில் கொட்டித் தீர்த்துவிட்டு புறோக்கரும் நாரியைப் பிடித்தபடி தாண்டித் தாண்டிச் செல்லத்தொடங்கினார்.


இதைக் கேட்க பாட்டியம்மாவிற்கு ஏற்பட்ட கவலை சொல்லில் அடங்காததொன்று. "கடவுளே...என்ரை பேரனுக்கு எப்பதான் கண்ணைத் திறக்கப் போறாய்..." என்றபோதுதான் "கிரீச்..." என்ற சத்தத்துடன் வாகனம் ஒன்று வந்து நின்றது. "பாட்டி" என்றபடி ஓடிவந்தாள் குண்டுமணி. பாட்டியம்மாவும் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு பார்த்துவிட்டு "அட நம்ப பேத்தி குண்டுமணி... எத்தனை வருசமாச்சடி உன்னைக்கண்டு" என்று விட்டு பாட்டியம்மா ஆசைதீர முத்தமழை பொழிந்து கொண்டிருந்தபோதுதான்....

பின்னங்கால் பிடரியில் முட்ட ஓடிவந்த ஜம்புலிங்கம் "பாட்டியம்மா...யார் இந்தப் பொடியன்" என்றதும் சற்றுத் திகைப்புற்ற பாட்டியம்மா "அது பொடியன் இல்லையடா உன்ரை முறைப்பொண்ணு குண்டுமணி..." "குண்டுமணியா!" என்ற ஜம்புலிங்கத்திற்கு நாணம் வந்து ஒட்டிக் கொண்டது. பெருவிரலால் நிலத்தில் கோலம் போட்டபடி ஜம்புலிங்கம், "என்ன... குண்டுமணி... இந்தக் கோலம்" என்றதும் பெரிதாகச் சிரித்த குண்டுமணி "மொக்கு... மச்சான்..." என்று தலையிலே ஒரு குட்டுப் போட்டுவிட்டு "இதுதான் இப்ப ஸ்ரைல்..." "ஆ... அப்படியா?" என விளங்காத ஜம்புலிங்கம். "எனக்கெங்கை உதெல்லாம் விளங்கப் போகுது..." எனப் பெருமூச்சுவிட்ட ஜம்புலிங்கத்தின் நிலைப்பாட்டை உணர்ந்த குண்டுமணி, "ஏய்... ஜம்பு மச்சான்! பார் உன்னையும் கொஞ்சக்காலத்திலை மாத்திக்காட்டுறன்.. வெறி சிம்பிள்..." என்றதும் பதறிப் போன ஜம்புலிங்கம், "என்ன குண்டுமணி உனக்கு வெறியா...! இதையேன் முதலிலை சொல்லல்லை... இப்பிடி ஆம்பிளைபோல வந்து நிற்கவே எனக்குத் தெரியும்..." "ஐயோ... மண்டு மண்டு. மொக்கு மச்சான் "வெறி சிம்பிள்... இங்கிலிசு சொல்லடா" என்றதும் தான், வழிந்துகொண்ட ஜம்புலிங்கம் "குண்டுமணி! நீ பேசிறது போலத்தான்... இஞ்சை பெரியாக்களெல்லாம் கதைக்கிறவை.... அரைவாசி இங்கிலீசு அரைவாசி தமிழ். நான் என்ன பாசை என்று கேட்டால் அதுதாண்டா ஆங்கிலிசு என்று சொல்லி என்ரை வாயை அடைச்சுப் போடுவினம்..." என்று முகம்கோணிய போதுதான்,

"ஜம்பு மச்சான் நீ கவலைப்படாதை. நான் திரும்பி வெளிநாடு போவதற்குள் உனக்கு முழு இங்கிலிசும் சொல்லித்தாறன்..." என்றதும், குறுக்கிட்ட ஜம்புலிங்கம் "வேண்டாம் குண்டுமணி அரைவாசி இங்கிலிசு தெரிஞ்சால் போதும். அரைவாசிக்கு தமிழ் இருக்குத்தானே. அப்பிடி பேசினால்தான் மதிப்புக் குண்டுமணி" என்றதைக் கேட்டதும் விழுந்து விழுந்து சிரித்த குண்டுமணி, "சரி சரி, வந்த களைப்பு கொஞ்சநேரம் ஓய்வெடுத்திட்டு பின்னேரம் வீட்டிற்குப் போவம்...." என்று கூறிவிட்டு உள்ளே சென்றதும்... ஜம்புலிங்கம் வெளியிலிருந்து யோசித்தபடியிருந்த போதுதான் நேரமும் நகர்ந்து கொண்டிருந்தது. இருந்த இடத்திலேயே தூங்கிவிட்டான் ஜம்புலிங்கம். கனவில் தந்தை வில்லங்கம் தோன்றி, "மகனே குண்டுமணி! உன்னை மாற்றப் போகிறாள். அவளை நீ மாற்று. ஆங்கில மோகத்தை நாடாதே! அவளை முதல் தமிழ்ப் பெண்ணாக மாற்று".

"செய்யிறேன் தந்தையே" எனப் பொங்கியெழுந்த ஜம்புலிங்கம் காவோலை போல சுருண்டிருந்த அவள் கூந்தலைப் பியத்து சரி செய்த போதுதான் "ஐயோ" என்ற அவல ஓலத்தால் திகைப்படைந்த ஜம்புலிங்கத்தின் முன்னால் பாட்டியம்மா தலைவிரி கோலமாக நிற்பது தெரிந்தது. "ஏணடா என்ரை தலையைப் பியத்துப் போட்டாய்..." எனப் பாட்டியம்மா தலையிலடித்து அழுத போது தான் அது கனவால் வந்த வில்லங்கம் என்று தெரிந்தது ஜம்புலிங்கத்திற்கு. ◘





# சுந்தரப் படைப்புகள் - 1

## -சவாரித்தம்பர்

சிரித்திரன் சஞ்சிகையின் வாசகர்கள் பப்பாவை நன்கு அறிவார்கள். 1963ஆம் ஆண்டு சிரித்திரன் சஞ்சிகையை ஆரம்பித்த சுந்தர் என்ற புனைபெயருக்குள் மறைந்துள்ள கரவெட்டியைச் சேர்ந்த சிவஞான சுந்தரம் அவர்கள், தமிழ் மண் பெற்றெடுத்த ஒரு மாபெரும் கலைஞர், கருத்தோவியர், சிந்தனையாளர், ஓவியர் எனப்பல பரிமாணங்களை வெளிப்படுத்தியவர்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் சிரித்திரன் சுந்தர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, கருத்தோவியம் , பற்றிய புலமைப்பதிவோடு கலை இலக்கிய உலகில் காலடி எடுத்துவைத்த கலைஞர் என்று பாராட்டுகின்றார்.

**எழுத்துருவாக்கம்:**
**பொன்.பூலோகசிங்கம்.**

பப்பா பல பாத்திரங்களைப் படைத்தார். அவை உயிரோட்டமுடைய கதா பாத்திரங்களாக மக்கள் மனதில் இடம் பிடித்தன. ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் ஒவ்வொரு சமூகப்பின்புலம் இருந்தது. ஆகையால் அப்பாத்திரங்களுக்கூடாகச் சொல்லப்பட்ட கருத்துக்களும் ஒவ்வொரு சமூகக் குழுமத்தினதும் குரலாக ஒலித்தன.


இவர்களில் சவாரித்தம்பர், சின்னக்குட்டி, விக்கிரி போன்ற பாத்திரங்கள் முதலிடம் பெற்றவை. இவர்கள் கரவெட்டிக் கிராமத்தில் வாழ்ந்த மனிதர்கள். சவாரித்தம்பர் ஒரு புரட்சிகர மனிதர். இடதுசாரி சிந்தனையாளர், சமூக சீர்திருத்தவாதி. பொதுவுடமைத் தந்தை கார்ல்மாக்ஸ், தமிழகப் பெரியார் ஈ.வெ. ராமசாமி நாயக்கர், ரஷ்ய மாமேதை லெனின் போன்ற மாமனிதர்களது மகத்தான கருத்துக்களால் கவரப்பட்டவர். ஆனால் சவாரித்தம்பர் ஆத்மீக நம்பிக்கையுடையவர். ஆலய உற்சவம், திருவிழாக் காலங்களில் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் மத்தியில் அமர்ந்து தமது கருத்துக்களைச் சொல்வார். அவரது சீர்திருத்தக் கருத்துக்களால் கவரப்பட்ட பலர் கலப்புத் திருமணம் செய்து கொண்டனர். சவாரித்தம்பரின் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள், சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதில் முதலிடம் பெற்றன. சின்னக்குட்டி என்பவர் சவாரித்தம்பரின் உதவியாளர். இருவரும் ஒன்றாகவே எங்கும் செல்வார்கள். ஒன்றாகவே காணப்படுவார்கள்.

இந்தியாவிலிருந்து தவில் நாதஸ்வரக் கலைஞர்களான திருவாவடுதுறை இராஜரட்ணம்பிள்ளை, குளிக்கரை பிச்சையப்பா, நீடாமங்கலம் சுப்பிர மணியம் போன்றோர் தில்லையம்பலப் பிள்ளையார் கோவில், யாக்கரைப் பிள்ளையார் கோவில், துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோவில் போன்ற இடங்களில், பெருந்திரளான மக்கள் மத்தியில் கச்சேரி வைத்த போதெல்லாம் அக்கலைஞர்களை வரவேற்று உபசரித்தவர் சவாரித்தம்பரும் சின்னக் குட்டியுமாவர். இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, தந்தை பெரியார் போன்றவர்கள் யாழ்ப்பாணம் வந்த போது, கரவெட்டி, நெல்லியடிப் பிரதேசத்திற்கு அவர்களை அழைத்துப் பெரும் வரவேற்புக் கொடுத்து உபசரித்த பெருமையும் இவர்களுக்கேயுரியது. அக்காலகட்டத்தில் வடமராட்சிப் பகுதியில் புகழ் பெற்றிருந்த நாடகக் கலைஞர்களான கிருஷ்ணாழ்வார், இயமன் வேலாயுதம் போன்ற உள்ளூர் மேடைக்கலைஞர்களை ஊக்கப்படுத்தியதோடு, தென்னிந்தியப் பாடகரான எஸ்.ஜி.கிட்டப்பா போன்ற கலைஞர்களை அழைத்துவந்து இசைக்கச்சேரிகளை ஊக்குவித்தவர்கள் சவாரித்தம் பரும், சின்னக்குட்டியுமேயாவர்.




இவர்களது செயற்பாடுகளால் சிரித்திரன் சுந்தர் மிகவும் ஈர்க்கப்பட்டார். புரட்சிகரக் கருத்துக்களைச் சொன்ன சவாரித்தம்பரது ஆளுமைச் சிறப்பும், அவரது வார்த்தைகளில் காணப்பட்ட கருத்துச் செறிவும் வடமராட்சி மக்கள் மத்தியில் அவருக்கு நல்ல மதிப்பை ஏற்படுத்தியிருந்தமையை உணர்ந்து கொண்ட சிரித்திரன் சுந்தர் அவர்கள், பின் நாளில் தான் வடித்த கருத்தூண்களில் (காட்டூன்களில்) சவாரித்தம்பரையும், சின்னக்குட்டியையும் மிக முக்கியமான பாத்திரங்களாக வடிவமைத்தார். அக்காலகட்டத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களை மக்கள் புரியக்கூடிய மொழி நடையில் இப்பாத்திரங்களினூடாக மக்களுக்குச் சொன்னார். அக்கருத்துக்களைச் சொல்லும் போது, நகைச்சுவையாகவும், கிண்டலாகவும் சுந்தர் சொன்னார். அவரது கருத்துப்பரிமாற்றத்தில் எப்போதும் ஒரு கிண்டல் பாணி இழையோடியிருப்பதைக் காணலாம். எந்தவொரு விடயத்தையுமே வெளவால் பார்வை பார்க்கும் இயல்பூக்கம் ஒன்று சுந்தரிடம் இயற்கையின் கொடையாகக் கைவரப் பெற்றிருந்தமையால், சவாரித்தம்பர் ஒரு ஜனரஞ்சகமான பாத்திரமாக வளர்ச்சிபெற்றார். பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தினகரன் பத்திரிகையில் பிரதம ஆசிரியராக இருந்தபோது, அவர் கொடுத்த ஊக்கம் காரணமாக சவாரித்தம்பருக்கும், அவரது கருத்துக்களுக்கும் வெகு ஜனத்தன்மை ஏற்பட்டது. இதனால் தினகரன் பத்திரிகையின் வளர்ச்சி படிப்படியாக உயர்ந்தது. விற்பனை அதிகரித்தது. சிரித்திரன் சுந்தர் படைத்த சவாரித்தம்பரது ஆளுமைச்சிறப்பு அழியாப் புகழைப் பெற்றுக்கொடுத்ததோடு, சவாரித்தம்பர் சாகாவரம் பெற்று சாஸ்வதமானார். இன்று சவாரித்தம்பர் வட இலங்கை மக்களின் பண்பாட்டுக் கோலங்களினதும், பாரம்பரியத்தினதும் அடையாளச் சின்னமாக மதிக்கப்படுகின்றார்.

## என்னத்தைச் சொல்லுறது....!



# மில்லித்தாத்தா

எல்லாருக்கும் வணக்கம்!

அதுக்கிடையிலை என்னை மறந்திட்டியளோ தெரியாது. எப்பிடி எல்லாரும் சுகமா இருக்கிறீங்களோ? சுனாமியும் வ[illegible]து சுத்தி அள்ளிக் கொண்டு போயிட்டுது. என்னதான் இ[illegible]பது வருசமா நொந்து வேதனையில எங்கட சனம் இருந்தாலும், உந்த அனர்த்தத்தை அடுத்து ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்ததைப் பார்க்க சந்தோசமாகயிருந்திச்சு. கஷ்ரப்படுகிறவனுக்கு உதவி செய்யிறதுக்கு பெரிய பணக்காரனா ஒண்டும் இருக்கத் தேவையில்லை. இருக்கிற பொருளை இல்லாதவனோட பகிர்ந்து கொள்ளுகிற பக்குவம்மட்டும் இருந்தாப் போதும். பக்குவத்தைப் பற்றிக் கதைக்கேக்கை, குடாநாட்டில இருக்கிற ஒரு ஊரிலை நடந்த ஒரு விசயம் ஞாபகத்துக்கு வருகுது. கோயில் எண்டு சொன்னால் ஒவ்வொரு ஊரிலையும் தவறாமல் ஒரு அமைதியான இடத்தில மக்களின்ரை வழிபாட்டுக்கெண்டு இருந்தால் நல்லதுதான். ஆனால், ஊருக்கு நடுவில இருக்கிற ஓரளவுக்கு பெரிய கோயிலுக்கு கோபுரம் கட்டவெண்டு கொஞ்சப் பேர் வெளிக்கிட்டிருக்கினம். நாலு சைபர்களோட பெரிய பெரிய தொகையளை ஒவ்வொரு வீடும் குடுக்கோணும் எண்டு வேற ஒற்றைக்காலில் அவை நிக்கினமாம். காசு தராத, இல்லாட்டி கொஞ்ச ஆயிரங்கள் மட்டும் குடுத்தாக்களின்ர பெயர், விபரங்களையெல்லாம் பகிரங்கமாகப் போட்டு, பரிசுகெடுத்திப் போடுவம் எண்டு வெருட்டுகினமாம் எண்டு அங்கையிருந்து வந்த ஒருத்தர் கவலைப்பட்டுச் சொன்னார். “சரி! சரி உதுக்கென்னத்துக்கு இப்ப நீங்கள் உணர்ச்சிவசப்படுறீங்கள்! எப்படிச் சேத்தாலும் கடைசியா சுனாமிச் சேதங்களைப் பார்த்து மனம் பொறுக்காமல் அதுக்கெல்லே செலவளிச்சிருப்பினம்!'' எண்டன். “நீங்கள் வேற! அப்படி நடந்திருந்தால் நான் ஏன் கவலைப்படப் போறன்! தொடர்ந்து கோபுர வேலையள் நடக்குது. பணத்திமிர் பிடிச்ச அளவுக்கு, அதைப் பரிவாய் பாதிக்கப்பட்ட எங்கட இன, சனத்துக்குக் குடுக்கத் தெரியேல்லை. ஒழுங்கா கஷ்ர நேரத்தில நாலுசதம் ஈயாத உதெல்லாம் இதயங்களோ? இல்ல வேற ஏதேனுமோ?'' எண்டு பலமா வேதனைப்பட்டார். சனத்தின்ரை கண்ணீரைத் துடைக்காமல் கட்டிடம் கட்டினால் புண்ணியம் வருமெண்டு நினைக்கிற உப்பிடியான ஆக்கள், தற்செயலா கடவுள் முன்னால தோன்றி உதை அறிவுறுத்தினால், கடவுளுக்கே ஆப்பு வைச்சுப் போடுவினம். கிருஷ்ணருக்கு குசேலர் அவல் கொண்டு போன கதை உங்களுக்குத் தெரியுமெல்லே? ஒரு ஊரின்ரை பெருமை கோபுரம் எத்தினை அடி உயரம் எண்டிறதில இல்லை தங்கியிருக்குது. வரலாற்று நகர்வில அந்த சமூகம் எத்தினை அடி முன்னோக்கி வைச்சிருக்குது எண்டிறது தான் கவனிக்கப்பட வேண்டியது. உந்த லண்டன் கனகதுர்க்கை அம்மன் கோயில், நாடு முழுக்க சனத்தின்ர தேவையளை அறிஞ்சு, எத்தினை நல்ல காரியங்கள் செய்யுது! அதுக்கு எவ்வளவு பாராட்டுக்குடுத்தாலும் தகும்! அதைவிட்டிட்டு சும்மா தேவாரத்துக்கு வாய் ஆட்டினால் போல, பெரிய தெய்வபக்தர்கள் எண்டு நினைக்கிறதுகளை ஒருத்தராலேயும் திருத்தேலாது. தாங்களாய் உணர்ந்தால்தான்.

உப்பிடித்தான் நாங்கள் சிலநேரம், என்னத்துக்காகச் செய்யவேணும் எண்டு தெரியாமலே சில காரியங்களைச் செய்து கொண்டிருப்பம். ஒருக்கால் மரத்தடியில என்ரை மட்ட வயசுக்காரரோட கதைச்சுக்கொண்டிருக்கேக்கிள்ளை, தீபாவளி கொண்டாடிறது பற்றியொரு விவாதம் வந்து விட்டுது. தேவர்களைத் துன்புறுத்தி வந்த அசுரனைக் கடவுள் அவதாரமெடுத்து சங்காரம் செய்த நாள், கட்டாயம் கொண்டாடப்பட வேணுமெண்டு, பென்சனியர் பேரம்பலம் அடிச்சுச்சொன்னார். “சரி, ஆரோ தேவருக்கு கடவுள் உதவியிருக்கிறார். அவங்கள் எங்களுக்கென்ன ஒட்டோ? உறவோ? நாங்கள் ஏன் சம்பந்தப்படாத ஆக்கள் கொண்டாடோணும்?' எண்டு விடாமல் நானும் கேட்டன். “மில்லி! உதுதான் உம்மட சுயநலப்புத்தி. உறவில்லாட்டியும் பாவம் தேவர்கள். தெய்வேந்திரன்ரை பதவியைப் பறிச்சு அட்டகாசம் செய்த அசுரனைக் கடவுள் வதம் செய்தால், எல்லா மக்களும் சந்தோசப்படோணும் தானே!'' “பொறும்! பொறும் பென்சன்! அமெரிக்கா பிரிட்டனிட்டை இருந்து விடுதலை பெற்றதுக்காக யூலை 4க்கு நாங்கள் வாணவேடிக்கை காட்டிறனாங்களே? அசுரன்ரை ஆட்சி எப்படி இருந்ததெண்டு எனக்குத் தெரியாது. ஆனால், தெய்வேந்திரனை அரசனா வைச்சிருந்தால் நாடு.... சீ... உலகம் உருப்படுமா? எட ஏற்கனவே அந்த மாதிரி அஞ்சு பேரை வைச்சுக்கொண்டு, கண்ணில படுற பொம்பிளையள் எல்லாரிலையும் ஆசைப்பட்டுப் பின்னால திரிஞ்ச, ஒரு வீடுவாசலுக்கு உதவாததுக்கு, கடவுள் ஏன் உதவி செய்தவர் எண்டு எனக்கும் விளங்கேல்லை. அதிலையும் உந்தப்படுபாவி இந்திரன், அங்கையிஞ்சை கையை வைச்சு, கடைசியில் கௌதம முனிவரின்ரை வீட்டிலயே கண்வைச்சவன் எல்லே! அது பாவம் அகலிகை. சந்தோசமா இருந்த பொம்பிளையின்ர வாழ்க்கையை நாசமாக்கிப்போட்டு, தான்மட்டும் சாப விமோசனம் பெற்றுப்போட்டு, திரும்பவும் கூத்தடிச்சு குடும்பங்களைச் சீரழிக்கிறதுக்காகக் கழண்டிட்டான். அது அகலிகை பாவம்.... விதிச்ச விதி எண்டு கல்லாகி எவ்வளவு காலம் காத்திருந்தது! ஆனால், அசுரர் கூட்டமெண்டு சொல்லப்படுற ராவணன் உவ்வளவுக்கு மோசமாகப் போகேல்லை'' எண்டு நான் சொன்னன். பென்சனியர் பேரம்பலம் திணறீட்டார். “அது... அது காலம் காலமா எங்கட மூதாதையர் எல்லாம் பின்பற்றி வாற விசயம். நீர் நேற்று வந்திட்டு, இஞ்சை நியாயம் கதைக்கேலாது. சத்தம் போடாமல் உதில கிடவும்'' அதுக்கு மேல நான் ஒண்டும் பெரிசாக் கதைக்கேல்லை. நியாயம் கற்பிக்கேலாத விசயத்துக்காக விசமத்தனமாக வாதாடுகிற ஆக்கள், என்ன கதைக்கலாம் எண்டிறதை மறந்து கதைக்கிறவை. ஏன் அதுக்கிள்ளை நான் தெரிஞ்சாப்பிறகு வாயைக் கொடுப்பான் எண்டிட்டு விலகி வந்திட்டன்.

ஏனோ பிள்ளையள்! நினைக்க வேதனையாவும் இருக்குது. சிரிப்பும் வருகுது. இயற்கை அனர்த்தமான சுனாமியை அரக்கன் எண்டு எல்லாரும் சொல்லிறம். அப்பிடியெண்டால் இன்னல்களுக்கு மத்தியிலையும் இதயத்தில் ஈரம் இல்லாமல் இருக்கிற பிறவியளை என்னண்டு சொல்லிறதாம்??

***- உங்கள் அன்பு மில்லித்தாத்தா.***


ஆவர்த்தனம்
மெயில் வாகனத்தார்:
''அந்தக் காலத்திலை ஒரு லட்சம் இருந்தா யாழ்ப்பாணத்திலை ஒரு பெரிய வீடு கட்டக் காணி வாங்கி, வீடும் கட்டிக் குடிபூரலும் செய்துவிடலாம். இப்ப அந்தக் காசுக்கு ஒரு கல்லறை கட்டக்கூட காணி வாங்கேலாத நிலை.... வந்திட்டுது....''
சொக்கலிங்கத்தார்:
"முந்தி ஆமிக்குப் பயந்து கடல் தாண்டி அக்கரைக்கு ஓடினோம். இனிமேல் சண்டை வந்தா ஆமிக்குப் பயந்து கடலைத் தாண்டிப்போக.... சுனாமிப் பயம் விடாது பாருங்கோ.... எல்லாப் பக்கமும் ஏதோ ஒரு ஆமி எங்களை ஏப்பம்விடக் காத்துக்கொண்டே இருக்குப் பாருங்கோ...."
ஐயர்:
''கலி முத்திப் போச்சுதோ இல்லையோ...! நம்ம சனம் கடவுளுக்கே கயிறுவிடத் தொடங்கீட்டினம். எப்பவோ வைச்ச நேர்த்திக் கடனுக்கே இந்த மாதம் செய்யிறன்.... அடுத்த மாதம் செய்யிறன்.... என்று கடன் சொல்லி டிமிக்கி விடுகினம் பாருங்கோ....''
அம்மணியார்:
"வரவர வாழ்க்கைச்செலவு அதிகமாகிக் கொண்டே போகுது. முந்தி பேர்ஸிலை காசு கொண்டுபோய் கூடைநிறையச் சாமான்கள் வாங்கிவரலாம்... இப்ப உரப்பையிலை காசு கொண்டு போனாலும் கூடைநிறையச் சமான் வாங்க முடியுதில்லை...."
செய்திச் சோமர்:
"எதெதற்கு நிவாரணநிதி சேர்க்கிறது என்று ஒரு விவஸ்தையே இல்லாமல் போச்சுது.... தேர்தலிலே தோற்ற அபேட்சகர், தேர்தலுக்குச் செலவழித்ததால் சொத்தெல்லாம் இழந்துவிட்டாராம்.... இப்ப அதற்காக நிவாரண நிதி சேர்க்கத் துடங்கியிருக்கிறாராம்....?"

Registered as a Newspaper at the G.P.O Sri Lanka Regd. No: P.Q. 35/000
பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம்: பி.கியூ35/000




HOLMES POLLARD & STOTT

நீங்கள் பாடுபட்டு சம்பாதித்த பணத்தை இழந்துவிடும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டுமா? இதற்கான ஒரே தீர்வு வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றல் முறை மட்டுமே. நாடெங்கிலுமுள்ள 113 செலான் வங்கி கிளைகள் மூலம் வெஸ்டன் யூனியன் சேவையை பெறும்போது, ஒவ்வொரு கிளையும் உங்கள் அன்புக்குரியவர் விரும்பும் உறுதியையும் பாதுகாப்பையும் பூரணமாக உத்தரவாதம் செய்கிறது.

செலிங்கோ செலான் டவர்ஸில் 24 மணிநேரமும் இயங்கும் வெஸ்டன் யூனியன் நிலையம் பணத்தை பெறுவோருக்கு இரவு பகலாக சேவையாற்றுகிறது.

WESTERN UNION
பணப் பரிமாற்றல்

செலான்
வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

24 மணிநேர ஹொட்லைன் 00 94 11 2452666

இப்பத்திரிகை திருமதி கோ.சிவஞானசுந்தரம் அவர்களின் சார்பில் 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ச.யோகரெத்தினம் அவர்களால் அதே முகவரியில் உள்ள யாழ்.ஈரபி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.